# ஒரு ஈஸ்ட்மென் நிறக் கொலை

## ராஜேஷ் குமார்

"உங்க கையை வெச்சுகிட்டு நிமிஷ நேரம் சும்மா இருக்க மாட்டீங்களா...?"

"இருக்க மாட்டேன்..."

"சை!, உங்க கூட கொடைக்கானலுக்கு தனியா வந்தது தப்பா போயிடுச்சு..."

"புருஷன் கூட ஹனிமூனுக்கு வர்றப்ப தனியாத் தான் வரணும்... அம்மாவையும் அப்பாவையும் கூட்டிகிட்டா வருவாங்க...?"

"என்ன இருந்தாலும் நீங்க. ரொம்ப மோசம்... இடுப்பைக் கிள்ளி கிள்ளி- அந்த எடம் என்னமா சிவந்திருக்கு பாருங்க...?"

"எங்கே பார்க்கலாம்..."

"சை கையை எடுங்க... யாராவது பார்க்கப் போறாங்க..."

"இங்கே பார்க்கிறவங்க யார் இருக்காங்க...? கண்ணுக்கெட்டின தூரம் வரைக்கும்... மரம்... செடி... புல்லுவெளி... எப்பவாவது தெரியற ரெண்டு மனுத்தலை. ஹனிமூனுக்கு வர்றவங்க ளெல்லாம்... இந்த மாதிரி ஆப் சீசன்லதான் வரணும்... கும்பல்

இல்லாம... பிச்சுப் பிடுங்கல் இல்லாம... நிம்மதியா புதுப் பொண்டாட்டியை கொஞ்சலாம்..."

கோக்கர்ஸ் வாக்ஸிங் அந்த மலைச் சரிவில் - ஏறிக் கொண்டிருந்த ராகினி தன் கணவன் பிரதீப்பை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

'இரண்டு நாட்களுக்கு முன்னால்-மணவறையில் 'தேமே' என்று உட்கார்ந்து ஐயர் சொன்ன மந்திரங்களை பவ்யமாய் உச்சரித்தவரா இவர்...?'

"என்ன ராகினி... அப்படி பார்க்கிறே...? என்னோட பர்சானல்டியைப் பார்த்து மயங்கி போயிட்டியா...?"

"ஆமா... அய்யா பெரிய மன்மதக் குஞ்சு... நா ஒண்ணும் அதுக்காக பார்க்கலை..."

"பின்னே...?"

"இவ்வளவு துள்ளலையும் துடிப்பையும் வெச்சுகிட்டு மணவறையில் - ரெண்டு நாளைக்கு முன்னாடி எப்படி உட்கார்ந்திட்டிருந்தீங்க...?"

"அடக்கி வச்சிட்டிருந்தேன்..."

"இருட்டப் போகுது... லாட்ஜுக்கு கிளம்பலாமா...?"

"அதுவும் சரிதான்... வெளியே குளிர்... ரூமுக்கு போயிட்டோம்னா கொஞ்சம் வெதுவெதுப்பா... கதகதப்பா..."

"அம்மாடி... நான் இன்னிக்கு ரூமுக்கே வரமாட்டேன்..."

"வரமாட்டியா...?"



"ஊ...ஊஉம்..."

"இப்பவே உங்கப்பாவுக்கு போய் தந்தியடிக்கிறேன்."

"எதுக்கு?"

"அவரை வரச் சொல்லி..."

"அதான் எதுக்குன்னு கேக்கறேன்..."

"மாமா...! மாமா...! நீங்க இவ்வளவு நகை போட்டு - லட்சரூபாய் செலவு பண்ணி அமர்க்களமா கல்யாணம் பண்ணி வெச்சு என்ன பிரயோஜனம்...? கையில ரெண்டாயிரம் ரூபாயை முள்ளங்கி பத்தையாட்டம் எடுத்து குடுத்து - 'மாப்ளே...மாப்ளே...! நீங்க எம்பொண்ணை கொடைக்கானலுக்கு கூட்டிப் போய் ஹனிமூன் கொண்டாடிட்டு வாங்க'ன்னு சொல்லி என்ன பிரயோஜனம்...? தொட்டா போதும் உங்க மக... கதிக்கிறளே... நான் என்ன பண்ணட்டுமென்னு அவர் கிட்ட கேக்கப்போறேன்...

முகத்தை விளையாட்டுத்தனமான சீரியஸோடு வைத்துக் கொண்டு - பிரதீப் தன் கண்களை உருட்டி உருட்டி பேசியதைக் கேட்டு - ராகினியால் சிரிப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை. சிரித்தாள்.

அதே விநாடி -

பின்பக்கமாய் அந்தக் குரல் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ்மீ..."

பிரதீப்பும் ராகினியும் திரும்பினர்கள்.

அந்த இளைஞன் நின்றிருந்தான். வயது முப்பதுக்குள் இருக்கலாம். ஒடிசலான சிவந்த தேகம். கொடைக்கானலின் குளிரை அலட்சியப் படுத்தி - வெண்ணிறத்தில் மணலில் ஜிப்பா மாதிரி ஏதோ ஒன்று அணிந்திருந்தான். முகம் புல்லு முளைத் ததைப் போல தாடியுடன் கரகரவென் றிருந்தது. சில்வர் பிரேமிட்ட கண்ணாடிக்குப் பின்னே அமைதியான கண்கள்.

"எஸ்..."

பிரதீப் அவனை நோக்கி வந்தான். அவன் புன்னகைத்துக் கொண்டே சொன்னான். "நான் உங்க சந்தோஷத்துக்கு இடைஞ்சலா வந்துட்டேனா...?"

"நோ...நோ...வாட்ஸ் தேர்...?"

"என்னோட பேர் மங்கள். நான் ஒரு ஆர்டிஸ்ட். சில்வர் காங்கேட்ல எனக்கு பங்களா இருக்கு... இந்த மாதிரி ஆப் சீசன்ல நான் கொடைக்கானலுக்கு வந்து தங்கி- ஆர்ட் பண்ணிட்டு போவேன். எனக்கு ரொம்ப நாளாவே மனசுல ஒரு ஆசை."

பிரதீப்பும் ராகினியும் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். அந்த மங்கள் தொடர்ந்தான்.

"ஒரு அழகான தம்பதியை இந்த கோக்கர்ஸ் வாக் மலைச்சரிவுல-சூரியன் மறைகிற நிமிஷங்கள்ல வெச்சு... ஆர்ட் பண்ணனும்ன்னு... இன்னிக்கு அந்த சந்தர்ப்பம் எனக்கு வாய்ச்சிருக்கு நீங்க அனுமதி குடுத்தா..."



"அதெல்லாம் வேண்டாங்க..." ராகினி அவசர அவசமாய் சொன்னாள்.

"டோண்ட் மிஸ்டேக் மீ... என்னைப் பத்தி நீங்க எந்த சந்தேகமும் படவேண்டிய தில்லை. நான் ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன்... எனக்கு ஃபாதர் மட்டும்... அவரும் வெளிநாட்டுல இருக்கார். எனக்கு வேண்டிய பணம் இருக்கு... ஆனா மன அமைதி மட்டும் இல்லை... உங்களை மாதிரியான அழகான தம்பதிகளைப் பார்க்கும்போது மட்டும் மனசுக்கு ஒரு நிம்மதி கிடைக்கும்... உங்களைப் பத்தி நான் தெரிஞ்சுக்கலாமா..."

பிரதீப் சொன்னான்.

"ஷ்... எஸ் ராகினி. நான் பிரதீப். ரெண்டு நாட்களுக்கு முன்னாடிதான் மதுரையில எங்க மேரேஜ் நடந்தது. நான் ஒரு பிரை வேட் கம்பெனியில அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸரா ஒர்க் பண்றேன்."

"மிஸ்டர் பிரதீப் நான் ஒண்ணு சொன்னா நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே!" மங்கள் மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு புன்னகை யோடு கேட்டான்.

"சொல்லுங்க..."

"இப்படி ஒரு அழகான மனைவி உங்களுக்கு கிடைச்சதுக்காகட நீங்க வாழ்க்கையோட ஒவ்வொரு விநாடியும் பெருமைப்ப...லாம்..."

ராகினியின் முகம் சிம்லா ஆப்பிள் நிறத்திற்கு போக-பிரதீப் சிரித்துக் கொண்டே சொன்னான். "தாங்ச்... யூ... ஃபார் யுவர் வேல்யபிள் காமெண்ட்... நீங்க என்ன மாதிரியான ஆர்ட் பண்றீங்க...?"

"ஆயில் பெயிண்ட் ஸ்கெட்சஸ்... மாடர்ன் ஆர்ட்ல முன்னாடி மோகம் இருந்தது. ஒரு தடவை அஜந்தா போய் வந்த பின்னாடி மாடர்ன் ஆர்ட்டைப் பார்த்தாலே எரிச்சலா வருது. பை...த...பை என்னோட ஆப்ளிகேஷனைப் பத்தி நீங்க எதுவுமே சொல்லலையே..."

"நீங்க ஆர்ட் பண்ணப் போகிற படத்துக்கு நாங்க ரெண்டு பேரும் மாடலா இருக்கணுமா ஸார்?"

"நோ...நோ... அந்த சிரமத்தை உங்களுக்கு கொடுக்கமாட்டேன். நிங்க் ரெண்டு பேரும் அந்த சரிவுல எதிரும் புதிருமா உட்கார்ந்து - சூரியன் மறைகிற அந்தப் - பின்னணியில் - ஒருத்தரை யொருத்தர் பார்த்திட்டிருக்கிற மாதிரி போஸ் கொடுத்தா போதும்... நான் அதை இந்தக் காமிராவில நிரப்பிக்குவேன்... போட்டோவைப் பார்த்து நான் போர்டுல ஸ்கெட்ச் பண்ணிக்குவேன்..."

பிரதீப் ராகினியைப் பார்த்தான்.

"என்ன ராகினி... ஸார் ரொம்பவும் ஆசையா கேட்கிறார்... போட்டோவுக்கு போஸ் குடுத்துடலாமா...?"



"எனக்கு என்னமோ மாதிரி இருக்குங்க..."

"நீ ஒரு மாதிரியும் ஃபீல் பண்ண வேண்டாம்... போட்டோ ஸ்டுடியோவுக்கு போய் ஒரு போட்டோ எடுத்துகிட்ட மாதிரி நினைச்சுக்கோயேன்... வீ... ஆர்... ரெடி ஸார்... காமிரா கொண்டு வந்திருக்கீங்களா...?"

அந்த மங்கள் தன் சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து - தீப்பெட்டி சைஸில் இருந்த அந்த சில்வர் கோட்டட் வெளிநாட்டு காமிராவை எடுத்துக் கொண்டான்.

"நாங்க எப்படி உட்கார்ந்து போஸ் தரணும்...?"

மங்கள் அந்தச் சரிவின் பச்சைப் பசேலென்ற ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து - அவர்கள் உட்கார வேண்டிய போஸ்ச்சரை காட்டினான்.

சிவப்பாய் சூரியன் மறைந்து கொண்டிருந்த அந்த மாலை நேரப் பனியில் - முழங்கால்களை மடித்து எதிரும் புதிருமாய் உட்கார்ந்தார்கள் ராகினியும், பிரதீப்பும். ஒருத்தர்க்கொருத்தர் நேர் பார்வைகளால் பார்த்துக் கொண்டார்கள்.

"மிஸஸ் ராகினி முகத்துல இன்னும் கொஞ்சம் ஸ்மைல் வரலாம்..."

புன்னகைக்க முயன்றாள் ராகினி.

"தட்ஸ் குட்...! மிஸ்டர் பிரதீப்... நீங்க சில சென்டி மீட்டர்ஸ் முன்னாடி வரலாம்...

ஃபேஸ் எக்ஸ்ப்ரஷன் அப்படியே இருக்கட்டும்..."

காமிராவின் வ்யூ பைண்டரில் கண்ணைப் பதித்து - மண்டியிட்டு உட்கார்ந்து - காமிராவின் பட்டனைத் தட்டினான் மங்கள். காமிராவின் தூரக் கண்ணாடிப் பகுதியிலிருந்து பிரகாசமாய் வெளிச்சம் சொட்டி மறைந்தது.

"தாங்க்யூ மிஸ்டர் பிரதீப்...! முன்னே பின்னே பழக்கமில்லாத எனக்கு நீங்க முகம் சுளிக்காமே உதவி பண்ணியிருக்கீங்க..."

"இந்த போட்டோவை வெச்சு... எப்ப ஆர்ட் பண்ணுவீங்க...?"

"நாளைக்குக் காலையில"

"எங்கே பண்ணுவீங்க...?"

"பங்களாவிலதான்..."

"நாங்க வந்து பார்க்கலாமா..."

"வித் ஃப்ளஷர்" சொன்ன மங்கள் தன் ஜிப்பாவின் பாக்கெட்டிலிருந்து 'சென்ட் வாசம்' அடிக்கும் அந்த விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினான்.

"இந்த இடத்திலிருந்து என்னோட பங்களா சரியா ஒரு கிலோ மீட்டர் தூரத்தில இருக்கும். மதுரை போற காட் ரோடு. உங்களுக்கு இப்போ ஏதாவது அவசரமான வேலை இருக்கா... மிஸ்டர் பிரதீப்...?"

"நோ...நோ... லாட்ஜுக்குத் தான் கிளம்பிட்டிருக்கோம்..."



"இப்... யூ டோண்ட் மைண்ட்... நீங்க என் வீட்டுக்கு வந்து கூடா ஒரு காப்பி சாப்பிடலாமே... கார்லதான் வந்திருக்கேன்..."

"வேண்டாம் மிஸ்டர் மங்கள்... நாங்கதான் நாளைக்கு வர்றோமே... காலையில எத்தனை மணிக்கு வரட்டும்...?"

"எட்டு மணிக்கு வாங்களேன்... நம்ம வீட்லேயே பிரேக் பாஸ்ட் எடுத்துக்கலாம்... பை...த...பை... நீங்க எந்த லாட்ஜ்ல தங்கியிருக்கீங்க...?"

"ஹோட்டல் தமிழ்நாடு..."

"வாங்க... நான் கார்லேயே கொண்டு போய் ட்ராப் பண்றேன்..."

"வேண்டாம் உங்களுக்கு சிரமம்...?"

"கார் இருக்கும் போது எனக்கென்ன சிரமம்? நான் என்ன உங்களை ரிக்சாவில உட்காரவெச்சு... இழுக்கவாய் போறேன்... ப்ளீஸ் கம்..."

மங்கள் சரிவில் வேகமாய் இறங்கி-

காட்ரோட்டில் நின்றிருந்த அவனுடைய காரை நோக்கிப் போக - பிரதீப்பும் ராகினியும் வேறு வழியில்லாமல் தொடர்ந்தார்கள்.

ராகினி தன் முழங்கையால் - பிரதீப்பின் இடுப்பை இடித்து கிசுகிசுத்தாள். "என்னங்க. நீங்க பாட்டுக்கு எல்லாத்துக்கும் தலையாட்டறீங்க... போட்டோ எடுத்துக்கவும் சின்னு சொல்லிட்டீங்க... கார்ல போலாம்ன்னு சொன்னதும் கிளம்பிட்டீங்க..."

பிரதீப் சிரித்தான்.

"மங்களைப் பார்ததா எனக்கு தப்பா நினைக்கத் தோணலை. பார்வையிலும் பேச்சிலும் ஒரு கண்ணியம் தெரியுது ராகினி... பேசாம வா... ஓசி கார் ட்ரிப்... நோகாமே நொள்ளாமே ஹோட்டல் வாசல்ல போய் எறங்கிக்கலாம்..."

"எனக்கென்னமோ இது சரியாய் படலை... முன்னே பின்னே தெரியாதவங்க கூப்பிட்டா உடனே போயிடறதா..."

"நானிருக்கேன்... தைரியமா வா ராகினி..."

காரை நெருங்கினார்கள்.

ஷெல் ஒயிட் ஸ்டாண்ட்ர்ட் கார் அது. சோப்பு நீரில் கழுவி எடுத்து மாதிரி 'பளிச்' சென்றிருந்தது. பின் கதவைத் திறந்து விட்டான் மங்கள்.

"ப்ளீஸ்...கெட்... இன்..."

அவர்கள் உள்ளே நுழைந்து பின் சீட்டில் பரவியதும் - கதவை அடக்கமாய் சாத்தி விட்டு விரைவில் சீட்டுக்கு வந்தான் மங்கள்.

காரை உசுப்பிக் கொண்டே கேட்டான்.

"நீங்க என்னிக்கு கொடைக்கானல் வந்தீங்க?"

"நேத்தைக்கு ஈவினிங்..."

"கொடைக்கானலை சுத்தி பார்த்துட் டீங்களா...?"



"ஓரளவுக்கு..."

"எங்கெங்கே போனீங்க...?"

"ப்ரியாண்ட் பார்க், ஸோலார் பினக்கல் அப்சர்வேடரி பில்லர் ராக்ஸ், செண்பகனூர் மியூஸியம், குறிஞ்சி ஆண்டவர் கோயில் இப்போ கோக்கர்ஸ் பாக்..."

"பியர் ஷோலா பால்ஸ் போகலையா?"

"அது நாளைக்கு ஷெட்யூல்ல வருது... டால்பின்ஸ் நோஸ், பெருமாள் பீக் எல்லாம் போனோம்..."

"நீங்க கார் ட்ரைவ் பண்ணுவீங்களா மிஸ்டர் பிரதீப்...?"

"பண்ணுவேன்..."

"உங்களுக்கு ஆட்சேபணையில் லேன்னா... என்னோட காரை எடுத்துக்கிட்டு நீங்க விருப்பப்பட்ட இடங்களுக்கு போயிட்டு வரலாம்..."

"நோ...நோ... அதெல்லாம் வேண் டாம்...! பஸ் ஜர்னி மாதிரி ஒரு சுகம் வராது..."

கார் காட்ரோடு வழியாய் பீறிட்டது. கொடைக்கானல் ஜில்லிப்பாய் ப்ரிஜ்ஜில் வைத்த மாதிரி இருந்தது. பிரதீப் முன் சீட்டில் கைகளை ஊன்றிக் கொண்டே கேட்டான்.

"மிஸ்டர் மங்கள்..."

"எஸ்..."

"உங்களுக்கு கல்யாணமாயிடுச்சா...?"

மங்கள் கசப்பாய் சிரித்துக் கொண்டே ஸ்டீரியங்கை வளைத்தான். "இதுக்கு நான்

பதில் சொன்னா உங்களுக்கு குழப்ப
மாயிருக்கும். சொல்லட்டுமா...?"

"சொல்லுங்க..."

"எனக்கு கல்யாணம் ஆகலை...
ஆகவும் ஆகாது..."

"ஏன்...?"

"மிஸ்டர்... பிரதீப்... நீங்க புதுசா
கல்யாணமாகி - சந்தோஷமாய் ஹனி
மூனுக்கு வந்திருக்கீங்க... என்னைப் பத்தி
சொன்னா உங்கமனசு கனமாயிடும்..."

"நீங்க இப்படி சொன்ன பின்னாடிதான்...
அதை தெரிஞ்சுக் கணும்ங்கிற ஆவல்
உண்டாகுது... ஏதாவது லவ் பெய்லியரா...?"

"ம்... லவ்தான்... பட்... பெய்லிய
ரெல்லாம் கிடையாது நானும் ரூபிணியும்
ஒருத்தரையொருத்தர் விரும்பினதை
அவங்க வீட்லேயும் சரி... என்னோட வீட்லே
யும் சரி... சந்தோஷமா ஏத்து கிட்டாங்க.
ப்ரியா பழக 'அலவ்' பண்ணினாங்க... நானும்
அவளும் நினைச்சா மதுரையிலிருந்து
கொடைக்கானல் வந்துடுவோம்... ஒரே
ரூம்ல தங்வோம்... பட்... எம்மேல பட்ட
காத்துக்ககூட அவமேல படாது..."

கார் வான் ஆலென் ஹாஸ்டலைத்
தாண்டியது.

"சொன்ற மார்ச் மாதம் ஏழாம் தேதி
பெய்ரி பால்ஸுக்கு நானும் ரூபிணியும்
போனோம்... பெயிண்ட் பண்றதுக்காக நான்
ஆர்ட் போர்டையும் கொண்டு போயிருந்



தேன். நீர்வீழ்ச்கி கொட்டி அந்த உயரமான
பாறை விளிம்பில் - யாராவது நின்னு போஸ்
கொடுத்தா நல்லாயிருக்கும்ன்னு சொன்
னேன். உடனே ரூபிணி அந்த அபாயகரமான
உச்சிக்கு போக ஆரம்பிச்சுட்டா. நான்
எவ்வளவோ சொல்லி தடுத்துப் பார்த்தேன்...
முடியலை. பாறையோட விளிம்புல போய்
உட்கார்ந்தா. 'ம்... பெயிண்ட் பண்ணுங்
க'ன்னு கத்தினா... நானும் அரை மனசோடு
பெயிண்ட் பண்ண ஆரம்பிச்சேன். நல்ல
வெய்யில் நேரம். ரூபிணிக்கு ஏற்கெனவே
கிட்டினஸ் பிராப்ளம் உண்டு. வெய்யில்
பட்டாலே தலை சுத்துதுன்னு சொல்லுவா...
ஆர்ட் போர்டல அவசர அவசரமா ஸ்கெட்ச்
பண்ணிட்டு தலையைத் தூக்கிப் பார்க்
கிறேன். ரூபிணி செங்குத்தா மேலேயிருந்து
கீழே விழுந்துட்டிருந்தா... தலை நீட்டிட்
டிருந்த பாறை மேலே பட்டு... ரத்தமா
சிதறி...

காரை 'சட்'டென்று பிரேக் போட்டு
நிறுத்தினான். மங்கள்.

அந்தக் குளிரிலும் முகம் வியர்ந்து
போயிருந்தது. ஸ்டீரியங்கைப் பிடித்திருந்த
கைகள் மெலிதாய் நடுங்கின.

பின் சீட்டில் உட்கார்ந்திருந்த ராகினி
யும், பிரதீப்பும் ஒருத் தரையொருத்தர்
பார்த்துக் கொண்டார்கள். பிரதீப் அவ
னுடைய தோள் மேல் கையை வைத்தான்.

"ஸாரி... மிஸ்டர் மங்கள்... தெரிஞ்சு...
தெரிஞ்சே... உங்க மனசைக் கிளறிட்டேன்."

"ஸோ... வாட்...? இந்த சோகம் எம் மனசுல எப்பவுமே உறைஞ்சு போயிருக்கும் இதைக் கிளறிப் பார்த்து - அதன் காரணமா கண்ணுல ததும்புற கண்ணீர் ஒரு சோகமான சுகம். இந்த சுகம் எனக்கும் பிடிக்கும்.' சொல்லி வறண்ட உதடுகளில் சிரித்துக் கொண்டே காரைக் கிளப்பினான் மங்கள்.

'ஹோட்டல் தமிழ்நாடு' தொலைவில் - நியான் விளக்கு போர்டோடும் சுற்றுலா குடைச் சின்னத்தோடும் தெரிந்தது.

ராகினியின் மனதில் ஒரு கனம் ஏறியிருந்தது.

## 2

கலா ஒரு குவார்ட்டர் விஸ்கி, ஒரு முழுக்கோழியை காரத்தோடு விழுங்கி விட்டு அந்த பாரை விட்டு வெளியே வந்தார்கள் அந்த மூன்று பேரும். பிலிஸ்வில்லா ரோட்டில் தள்ளாடினார்கள்.

ஒருவன் காந்தன். தீர்க்க மான உயரம். மாநிறம். சிலும் பின தலை முடியை கர்ச்சீப் பால் அடக்கியிருந்தான். வலது கண் புருவத்தின் மேல் லாடமாய் ஒரு தழும்பு. உருட்டின மாதிரியான மூக்குக்குக் கீழே பிரதானமாய் மீசை. நீலக்கோடுகள் போட்ட வெள்ளை சர்ட்லும் - சாம்பல் நிற பேண்டிலும் என்பது கிலோ உடம்பைத் திணித்திருந்தான்.

இரண்டாமவன் மருது. நடுத்தர வயது. நிறை மாச கர்ப்பிணியை ஞாபகப்படுத்தும்



தொப்பை. வரிவரி பனியன். வழுக்கை மண்டை, கழுத்தில் கர்ச்சீப். இடுப்பில் அவிழக் கூடிய நிலைமையில் லுங்கி.

மூன்றாமவன் குமரு. இளைஞன். மூன்று பேர்களில் இவன் நிறைய தள்ளாடி னான். உடம்பில் சதை பூச்சில்லாமல் ஒட்டடைக் குச்சி மாதிரி தெரிந்த குமரு நான்கு தடவை வேலூர் ரிடர்ண்ட், அணிந்திருந்த மட்டமான டீ ஷர்ட்டில் மட்டமான ஆங்கில வாசகம். சாயம் போன ஜீன்ஸ் பேண்டில் - முக்கியமான இடத்தில் ஜிப் மாட்டப்படாமல் மானத்தை வாங்கியது.

"டேய்... குமரு... இப்போ எங்கேடா போகலாம்...?"

"உள்ளே சரக்கு போயாச்சு... வயிறு முட்ட புரோட்டாவும் கோழியும் வயித்துக் குள்ளே போட்டு ரொப்பியாச்சு... ஹில்டாப் ரோட்ல இருக்கிற புலான வூட்டுக்கு போய் ராத்திரி பூராவும் தங்கிடலாமா...?"

"அங்கே வேண்டாண்டா குமரு..." காந்தன் சொன்னான்.

"ஏன்...?"

"அங்கே போலீஸ் கெடுபிடி இப்போ எக்கச்சக்கமாயிடுச்சு..."

'அப்போ... நீயே சொல்லு... வேற பக்கம் எங்கே போலாம்...?'

"பீன் ஹில் ரோட்ல... ரோஹின்னு ஒரு ஆங்கிலோ இண்டியன்... அபாரமான சரக்கெல்லாம் வெச்சிருக்களாம்... அங்கே போயிடுவோமா...?"

"அவ துட்டு ஜாஸ்தியா கேப்பாளே...?"

"குடுத்துட்டாப் போச்சு..."

"அப்ப...நட..."

மூன்று பேரும் லேசாய் தள்ளாடிக் கொண்டே நடந்தார்கள். ஹோட்டல் தமிழ்நாடு அருகே-அதன் காம்பௌண்ட் கேட் பக்கமாய் வந்தபோது குமரு 'சட்' டென்று நின்றான்.

"ஏண்டா நின்னுட்டே...?"

"அந்தக் க்கார்லயிருந்து இறங்கற கட்டையைப் பார்ரா...! சும்மா ராயர் கடை பேக்கரி மாதிரி 'சிக்'ன்னு இருக்கா..."

"புதுசா கல்யாணமானது போலிருக்கு"

"காரை விட்டு இறங்கற ரெண்டு பேர்ல யாரு புருஷன்னு தெரியலை..."

"ராத்திரிக்கு ஒருத்தன்... ப்கலுக்கு ஒருத்தன் போலிருக்கு... அவ பாடு திண்டாட்டம்தான்..."

"திண்டாட்டமா...? கொண்டாட்டம்ன்னு சொல்லு..."

காரை விட்டிறங்கி - ராகினியிடமும், பிரதீப்பிடமும் பேசிக் கொண்டிருந்த மங்கள் தனக்குப் பின்னால் - எழுந்த அநாகரீகப் பேச்சைக் கேட்டு 'குபீ' ரென்று திரும்பி ஞான்.

"வெயிட் ஏ மினிட் மிஸ்டர் பிரதீப்..."

சொல்லிவிட்டு - வேகவேகமாய்-

அந்த மூன்று பேரை நோக்கிப் போனான்



மங்கள். ஸ்தாயியை குறைத்துக் கொண்டு - மிகவும் நிதானமான குரலில் கேட்டான.

"ஏம்பா... ஒரு பெண்ணைப் பத்தி இப்படித்தான் அநாகரீகமா பேசறதா...? இப்படியெல்லாம் பேச உங்களுக்கு வெக்கமாயில்லை...?"

காந்தன் முன்னால் வந்தான்.

"என்ன ஸார் சொன்னீங்க...? நாங்க அநாகரீகமா பேசிட்டோமா...? சரி... சரி நாகரீகமா பேசறது எப்படின்னு கொஞ்சம் சொல்லித் தர்றீங்களா...?"

மங்கள் சீறினான்.

"குடிகாரப்பசங்களுக்கு நாகரீகத்தைப் பற்றி என்ன தெரியும்? அக்கா தங்கச்சியோட பொறந்து - அதுங்க கூடவே வளர்ந் திருந்தா... அதெல்லாம் தெரிஞ்சிருக்கும்..."

சொல்லி விட்டு நகர்ந்த மங்களை - ஒருத்தன் தோளைத் தட்டி நிறுத்தினான்.

"இந்தா ஸ்ஃரே... ஒரு நிமிஷம்... நில்லு..."

மங்கள் நின்றான்.

"என்ன சொன்னே... நாங்க குடிகார பசங்களா...?"

"ஆமா..."

சொன்ன மங்களின் ஜிப்பாவை ஒருத்தன் எட்டிப் பிடித்தான். ஆத்திரமாய் கசக்கினான்.

அடுத்த விநாடி-

அவன் கை உதறப்பட்டு - முகத்தில் மொத்தப்பட்டு மூக்கில் ரத்தம் காட்டினான்.

மற்ற இரண்டு பேரும் ஆளுக்கொரு பக்கமாய் வர-மங்கள் சுழன்று - தன் வலது காலை வீசி - இரண்டு பேர்களின் இடுப்புகளையும் சந்தித்தான்.

பிரதீப் ஓடிவந்தான்.

"மிஸ்டர் மங்கள்... விடுங்க அவங்களை..."

"அவன் என்ன பேச்சு பேசறான்னு பார்த்தீங்களா...? நான் கத்துகிட்ட கராத்தேயை இவங்கவிட்ட காட்டினாத் தான்... அடுத்த தடவை ஒரு பெண்ணைப் பார்க்கும் போது ஞாபகம் வரும்..."

"குடிச்ச ஆசாமிகிட்டே எதைப்பேசி... என்ன பரயோஜனம்? வாங்க... நாம ஹோட்டலுக்குப் போலாம்..."

மங்களின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு - ஹோட்டலுக்குள் போனான் பிரதீப். மங்கள் பொருமினான்.

"இப்பேர்ப்பட்ட ஆசாமிகளை சும்மா விடக்கூடாது மிஸ்டர் பிரதீப். போலீஸ்ல ஹேண்ட் ஓவர் பண்ணனும்... ஸ்டேஷன்ல இருக்கிற எஸ்.ஐ. எனக்கு ரொம்பவும் வேண்டியவர். இங்கிருந்து ஒரு போன் பண்ணினா போதும்... ஜீப் வந்து இவங்களை அள்ளிகிட்டு போயிடும்..."

"ப்ளீஸ்... வாங்க... இப்படி ரோட்ல சத்தம் போட்டா கும் பல் கூடிடும்... அப்புறம் நாமதான் ரொம்பவும் டெலிகேட்டா ஃபீல் பண்ணனும்..."



"இப்படி நாம பயப்படறதுனாலதான்... அந்த மாதிரியான ஆசாமிங்க ரொம்பவும் துளுத்து போயிடறானுக..." மங்கள் திரும்பி திரும்பி பார்த்து கத்திக் கொண்டே பிரதீப்போடும் ராகினியோடும் ஹோட்டலுக்குள்ளே போனான்.

தாடையையும், இடுப்பையும் தடவிக் கொண்டு - நின்றபடி ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டிருந்த மூன்று பேரின் கண்களிலும் கோபக் கனல்.

"யார்ரா இந்த ஜிப்பாக்காரன்...?"

"இவனை எனக்குத் தெரியும் குமரு..."

"எங்கேயிருக்கான்...?"

"சில்வர் காஸ்கோட்ல..."

"இடுப்பெலும்பு 'நை நை'ன்னு கத்துது..."

"மூஞ்சில் விட்ட குத்துல குவார்ட்டர் விஸ்கி போதையே காணாமே போயிடுச்சு..."

"காந்தன்..."

"ம்..."

"நம்ம மூணு பேர் மேலேயும் கை வெச்சவன் இந்த உலகத்து காத்தை சுவாசிச்சுட்டு இருக்கக்கூடாது..."

"ஏற்பாடு பண்ணிடுவோம்..."

## 3

மறுநாள் காலை எழுமணி.

கொடைக்கானல் அமோகமான பனியில் இருக்க - அதை பொருட்படுத்தாமல் -

கனமான உல்லன் ஸ்வெட்டர்களோடு - ஹோட்டலினின்றும் வெளியே வந்தார்கள், ராகினியும் பிரதீப்பும். ராகினி முணு முணுத்துக் கொண்டே வந்தாள்.

"என்ன ராகினி முணு முணுக்கிறே...?"

"ஒண்ணுமில்லையே."

"ஒண்ணுமில்லையா...? மூஞ்சி என்னவோ மாதிரி இருக்கு..."

"நான் சொன்னா... நீங்க எதைத்தான் கேக்கப் போறீங்க...? இப்போ அந்த மங்கள் வீட்டுக்கு போய்த்தான் ஆகணுமா...?"

"அவர் உன்னையும் என்னையும் ஸ்கெட்ச் பண்றதை பார்க்க வேண்டாமா... ராகினி. என்னமோ தெரியலை; எனக்கு மங்கள் மேலே ஒரு பிடிப்பு விழுந்துடுச்சு... நேத்தைக்கு ராத்திரி உன்னையும் என்னையும் கலாட்டா பண்ணின மூணு பேரையும் என்னமா புரட்டு எடுத்தார்... பார்த்தியா...? அவர் ஒரு ஆர்டிஸ்ட், காதலிச்ச பெண்ணை ஒரு அகால மரணத்துக்கு பலி கொடுத்தவர், ஒரு சோபிஸ்ட்கேட்டட் பேமிலியைச் சார்ந்தவர்... சுருக்கமா சொல்லப் போனா எ மேன் வித் ஃபுல் ஆப் தாட்ஸ்"

பேசிக் கொண்டே போனவன் ஹோட்டலுக்கு வெளியே இருந்த டாக்ஸி ஸ்டாண்டை நெருங்கியதும் நின்றான்.

"என்ன ராகினி... டாக்ஸியில போயிடலாமா?"

"தண்டச் செலவுதான். இருந்தாலும் வேண்டாம்னு சொல்ல முடியலை...



அவ்வளவு தூரம் டாக்ஸி வருமான்னு கேளுங்க..."

ராகினி சொன்னதை மோப்பம் பிடித்துக் கொண்ட ஒரு டாக்ஸி டிரைவர் வேகவேகமாய் அவர்களை நெருங்கினான்.

"என்ன ஸார்... எங்கே போகணும்...?"

"சில்வர் காஸ்கோட்..."

"போகணுமா...? போயிட்டு வரணுமா ஸார்...?"

"போனாப் போதும்..."

"அம்பது ரூபா ஆகும் ஸார்..."

"இது அதிகம்..."

"கரெக்டான ரேட்தான் ஸார் சொல்லியிருக்கேன்... இங்கிருந்து சில்வர் காஸ்கோட் எட்டு கிலோ மீட்டர் ஸார்... வரும் போது எனக்கு சவாரி கிடைக்காது. காட்ரோட்ல கிலோ மீட்டர்க்கு ரெண்டரை ரூபா வாங்கறோம்... நீங்களே கணக்கு போட்டு பாருங்க ஸார்..."

"நான் கணக்குல ரொம்பவும் வீக் டிரைவர்..." பிரதீப் சிரிக்காமல் சொல் - டிரைவர் வாயில் புகை பறக்க சிரித்தான்.

"தமாஷ் ஸார் நீங்க... புதுசா கல்யாணமாகி ஒய்ப்போட ஹனிமூன் வந்திருக்கீங்க... பத்துக்கும் இருபதுக்கும் கணக்கு பார்க்கலாமா ஸார்...?"

"சரி நாப்பது ரூபாயை வாங்கிகிட்டு வண்டியை எடு..."

"நாப்பத்தஞ்சா குடுத்துடுங்க ஸார்..."

டாக்ஸியின் பின் கதவுகளைத் திறந்து விட்டான் டிரைவர். இருவரும் உள்ளே போனார்கள். சில விநாடிகளில் டாக்ஸி கிளம்பியது.

வெடேரினரி ஹாஸ்பிடலைத் தாண்டியதும்-

ஸ்டீரியங்கை கையாண்டு கொண்டே டிரைவர் கேட்டான். "கொடைக்கானல்ல மத்த இடங்களையெல்லாம் சுத்தி பார்த்துட்டீங்களா ஸார்...?"

"இப்பத்தான் ஒவ்வொண்ணை பார்த்துட்டு வர்றோம்..."

"ரெண்டு நாள் நம்ம டாக்ஸியை வாடகைக்கு பேசிக்குங்க ஸார்... 'சட்'ன்னு எல்லாத்தையும் சுத்தி காட்டிடறேன்..."

"உன்னோட டாக்ஸியில ஏறி கொடைக் கானல்ல சுத்திப் பார்க்கணும்ன்னா ஏகப்பட்ட சார்ஜ் ஆகுமே... நான் மதுரை பந்தடி தெருவுல இருக்கிற வீட்டை வித்தாதானே அது முடியும்?"

"சரியான தமாஷ் ஸார் நீங்க..."

ராகினி சாத்தின கண்ணாடி ஜன்னல் வெளியே - பனி பெய்து கொண்டிருந்த வெள்ளை வெளேரென்ற கொடைக்கானலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்தாள். பிரதீப் தொணதொணத் தான் டிரைவரிடம்.

"குறிஞ்சி மறுபடியும் எப்போ பூக்கும்?"

"கடைசியா... 1992 பூத்தது ஸார்..."



"ம்..."

"அடுத்தப்படியா 2004 லதான் பூக்கும்..."

"கரெக்டா பனிரெண்டு வருஷத்துக்கு ஒரு தடவைதான் பூக்குமா...?"

"ஆமா ஸார்..."

"அது ஏன் அப்படி?"

"அது குறிஞ்சி ஆண்டவரோட கட்டளை ஸார்... 2004ல கொடைக்கானல் வந்து பாருங்க. அப்படியே மலைச்சு போயிடுவீங்க... டூரிஸ்ட் கூட்டம் நெரியும்..."

"இதே சில்வர் காஸ்கேடுக்கு யாராவது கூப்பிட்டா... நீ நூறு ரூபா கேப்பே... அப்படித்தானே...?"

"இன்னும் ஜாஸ்தியா கேப்பேன் ஸார்... அப்போ பெட்ரோல் விலை ஏறியிருக்குமே 2004க்கு இன்னும் நாலு வருஷம் இருக்கே ஸார்..."

ராகினி தன் கணவனின் தோளைத் தொட்டு மெதுவான குரலில் சொன்னாள். "கொஞ்ச நேரம் தொணதொணன்னு பேசாமே வர்றீங்களா...? டாக்ஸியில ஏறின நிமிஷத்திலிருந்து கடை வீதி கீரைக்காரி யாட்டம் 'சளசள'ன்னு பேசிட்டே வர்றீங் களா...?"

"அம்மா... என்ன ஸார் சொல்றாங்க...?" டாக்ஸி டிரைவர் தலையைத் திருப்பிக் கேட்டான்.

"நீ... நல்லா பேசறியாம்...! உம்பேச்சை கேட்டுக்கிட்டே இருக்கலாம் போல் இருக்காம்." பிரதீப் சொல்ல- ராகினி உஷ்ணமாய் முறைத்தாள்.

"ரொம்ப தேங்க்ஸ்ம்மா... என்னை எல்லாரும் 'அரட்டை அய்யாசாமி'ன்னு கூப்பிடுவாங்க..." டிரைவர் புளகாங்கிதம் அடைந்து டாக்ஸியை விரட்டினான்.

பதினைந்தே நிமிஷம்.

டாக்ஸி சில்வர் காஸ்கோடில் இருந்தது. பீரதீப் மங்கள் கொடுத்த விசிட்டிங் கார்டை எடுத்து அட்ரஸை படிக்க - டாக்ஸி நான்கைந்து குறுகலான காட்ரோடு வளைவுகளில் திரும்பி - யூகலிப்ட்ஸ் மரங்களுக்கு மத்தியில் ரோஸ் நிற டிஸ்டெம்பரோடு தெரிந்த கட்டிடத்தின் முன்னால் மௌனமானது.

"இதான் ஸார்... நீங்க சொன்ன அட்ரஸ்..."

பிரதீப்பும், ராகினியும் காரின் பின் சீட்டிலிருந்து இறங்கினார்கள். டிரைவர் கேட்டான். "வெயிட் பண்ணட்டுமா ஸார்...?"

"வேண்டாம் போயிடு..." பர்ஸைத் திறந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்ட-டிரைவர் அதை வாங்கிக் கொண்டு டாக்ஸியை நகர்த்தினான்.

ராகினி பின் தொடர பிரதீப் பங்களாவின் காம்பௌண்ட் கேட் அருகே வந்தான். கேட் வெறுமனே சாத்தியிருக்கத் தள்ளினான்.



மரங்கள் அடர்த்தியாய் சூழ்ந்து - பனியில் நனைந்து கொண்டிருந்த அந்த பங்களாவில் சுற்றுப்புறம் பூராவும் அமோக நிசப்தம். ஒன்றோடு ஒன்று கோபித்துக் கொண்ட மாதிரி நான்கைந்து கூரை வீடுகள் தள்ளித் தள்ளித் தெரிந்தது.

"என்னங்க... இது... ஏரியாவைப் பார்த்தாலே மனசுக்கு என்னமோ மாதிரி இருக்கு... நெஞ்செல்லாம் 'திக் திக்'ன்னு அடிச்சுக்குது..."

பிரதீப்பின் கையைப் பற்றிக் கொண்டாள் ராகினி.

"ஏன் ராகினி இப்படி பயந்துக்கிறே...? மலைப்பிரதேசத்துல வீடெல்லாம் இப்படித்தான் இருக்கும்... அதுவும் நாம காலை நேரத்துல வந்திருக்கோம்..."

"அந்த மங்களை கண்டிப்பா பார்த்துதான் ஆகணுமா...?"

"ஆமா..."

போர்டிகோவை நெருங்கினார்கள். நேற்றைக்கு ராத்திரி ட்ராப் செய்த அந்த கார் கான்வாஸ் படுதாவுக்குள் நின்றிருந்தது.

காரைச் சுற்றிக் கொண்டு

போர்டிகோ வாசற்படி ஏறி-

கதவின் மேல் கையை வைத்தார்கள். வெறுமனே சாத்தியிருந்த கதவு கைபட்டதும் உள்ளே போயிற்று.

"ஸார்..."

குரல் கொடுத்தான் பிரதீப்.

உள்ளே மௌனம்.

"வெளியே ஏதாவது வாக் போயிட்டாரோ...?"

"வீட்டைத் திறந்து போட்டுட்டா வாக் போவாங்க...?"

"உள்ளே வேலைக்காரங்க இருக்கலாமே...?"

பிரதீப் முன் ஹாலில் நுழைந்து - மறுபடியும் குரல் கொடுத்தான்.

"மிஸ்டர் மங்கள்..."

உள்ளேயிருந்து மௌனம் மிதந்து வந்தது. பிரதீப் இன்னும் கொஞ்சம் முன்னேறினான். உள்ளறையில் அந்த மாற்றம் தெரிந்தது.

ஆர்ட் ஸ்டாண்ட் இரண்டாய் முறிந்து சுவரோரமாய் கிடக்க ஒரு வரைபடதாள் இரண்டாய் கிழிக்கப்பட்டு படபடத்தது. கலர் பேஸ்ட் அடைத்த ட்யூப்புகள் ஏராளமான வண்ணங்களில் இறைந்து கிடைந்தது.

பிரதீப் முகம் மாறி ராகினியை திரும்பிப் பார்த்தான். அவளும் கண்களில் ஒரு திடுக்கிடலை வாங்கியிருந்தாள்.

"என்னங்க இது... இப்படி இறைஞ்சு கிடக்கு...?"

"அதானே..."

கேட்டுக்கொண்டே அந்த அறைக்குள் நுழைந்த பிரதீப் 'சட்'டென்று இருதய பாகத்தில் கை வைத்து அதிர்ந்தான்.



ஈஸ்ட்மென் நிறங்களில் வர்ணக் குப்பிகள் - எட்டு திசைகளிலும் சிதறியிருக்க அதன் மையத்தில் ரத்தச் சகதியாய் - அடர்த்தியான சிவப்பில் செத்துக் கிடந்தான் மங்கள். வயிற்றில் ஒரு கூர்மையான மரச்சட்டம் சொருகப் பட்டிருந்தது.

## 4

"முட்டாள்!" - என்றான் காந்தன்.

எதிரே குமரு கையைப் பிசைந்தபடி நின்றிருந்தான். மருது எரிச்சலோடு அந்த அறையில் நடை பயின்று கொண்டிருந்தான். "இவன் எப்பவும் இப்படித்தான்" காந்தன் மறுபடியும் கேட்டான். "உன்னோட மணி பர்ஸை அந்த இடத்துலதான் விட்டியா...? இல்லே வேற எங்கேயாவது விட்டியா...? நல்லா யோசிச்சு பாரு... குமரு..."

குமரு யோசித்தான்.

"அவனோட பங்களாவுக்குள்ளே நுழையறதுக்காக-பின்பக்கசுவர் ஏறி குதிக்கறப்போ... அந்த பர்ஸ் என்கிட்ட இருக்கு... உள்ளே அவனுக்கும் நமக்கும் நடந்த போராட்டத்துலதான் அது விழுந்திருக்கணும்..."

"அந்த பர்ஸ்ல என்னென்ன இருக்கும்...?"

"என்னோட போட்டோ... ஊர்லயிருந்து என்னோட அம்மா எனக்கு எழுதின போஸ்ட் கார்டு... கொஞ்சம் பணம்..."

"முண்டம்...! போட்டோவையும், லெட்டரையும் எதுக்காக பர்ஸ்ல கொண்டு போய் வெக்கிறே... அந்த பர்ஸ் போலீஸ் கையில கிடைச்சா... யானைக்கு அல்வா கிடைச்ச மாதிரி ஆயிடுமே...?"

காந்தன் தன் கையிலிருந்த வாட்ச்சைப் பார்த்தான்.

7.00 மணி.

"இந்நேரம் பங்களாவுக்கு போலீஸ் வந்திருந்தா... நாம அங்கே போயும் பிரயோஜனமில்லை... மருது..."

"போய் பார்க்கலாமே...? ஏரியா ரொம்பவும் தள்ளியிருக்கு... விஷயம் இன்னும் வெளியே வராமயிருந்தா... காதும் காதும் வெச்ச மாதிரி குமருவோட பர்ஸை எடுத்துகிட்டு வந்துடலாமே..."

"அவனை நாம கொன்னிருக்கக் கூடாது... காந்தன்... கையையோ காலையோ முறிச்சு விட்டிருக்கணும்... மருது நிதானமில்லாமே... அந்த மரச்சட்டத்தை உடைச்சு வயித்துல ஏத்திட்டான்... நாம இதுவரைக்கும் கொலை பண்ணாமேதான் இருந்தோம்... இப்போ அதையும் பண்ணிட்டோம்... செத்தவன் பெரிய வீட்டு மனுஷன்... போலீஸ் ரொம்பவும் தீவிரமா இருப்பாங்க..."

"சரி... நடந்து போனதைப் பத்தி பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை... மொதல்ல அந்த பர்ஸ் போலீஸ் கைக்கு கிடைக்காமே பண்ணனும்... மருது... நீ இங்கேயே இரு...



நானும் குமருவும் அந்த பங்களாவுக்கு போயிட்டு வந்துடறோம்..."

மருது தலையாட்ட-

தன் வீட்டு வாசலில் நின்றிருந்த - அந்த பழைய ராஜ்தூத் பைக்கை நோக்கிப் போனார்கள் காந்தனும் குமருவும்.

## 5

மங்கள் அந்த வண்ணச் சிதறல்களுக்கு மத்தியில் கைகளையும் கால்களையும் குலுக்கிக் கொண்டு - ஒரு சின்ன ரத்த மூட்டையாய் தெரிந்தான். செத்துப் போயிருப்பது அப்பட்டமாய் கண்களில் தெரிந்தது. நாசித்து வாரங்களில் ரத்தம் கருஞ் சிவப்பில் கட்டியாய் உறைந்து போய் அடைத்திருந்தது. அணிந்திருந்த ஜிப்பா கிழிபட்டு - மார்பையும் வயிற்றையும் காட்டியது.

"எ...ன்...ன...ங்...க..."

பிரதீப்பின் தோளை தன் நடுங்கும் கரங்களால் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டாள் ராகினி.

பிரதீப் அறைக்குள் போக முயன்றான்.

"வே... வேண்டாங்க... உள்ளே போகாதீங்க..."

"பார்த்துட்டு எப்படி உள்ளே போகாமே... இருக்கிறது ராகினி...! போலீஸுக்கு இன்பார்ம் பண்ண வேண்டாமா...?"

"நீங்க எதையும் பண்ண வேண்டாம்... வந்த இடத்துல வம்பை விலைக்கு வாங்கிக்காதீங்க... சுவடு காட்ட்ாமே வெளியே போயிடலாம் வாங்க..."

"என்ன ராகினி... இது உனக்கே சரியா படுதா...? வீ...ஆர் எஜீகேட்டட். நடந்து கொலையைப் பத்தி போலீஸுக்கு சொல்ல வேண்டாமா...?"

"வேண்டாம்..."

ராகினியின் பேச்சுக்கு கட்டுப்பட்டு பிரதீப் பின்வாங்கின அதே நேரம்-

வீட்டின் பின்புறம்-

அந்த சத்தம் கேட்டது.

யாரோ. காம்பௌண்ட் சுவரிலிருந்து குதிக்கும் சத்தம்.

பதட்டமானான் பிரதீப்.

"ராகினி..."

"என்னங்க..."

"யாரோ வர்றாங்க... அந்த பீரோவுக்கு பின்னாடி போய் நீ ஒளிஞ்சுக்க - இந்த பீரோவுக்கு பின்னாடி போய் நான் ஒளிஞ்சுக்கிறேன்..."

"வே... வேண்டாங்க... நாம...வெ...வெ.. வெளியே போயிடுவோம்...எனக்கு பயம்மா யிருக்கு..."

"பயப்படாதே ராகினி... வர்றது யார்ன்னு நமக்குத் தெரியணும்... பின்பக்கமா சுவரேறி குதிச்சு வர்றவன் நிச்சயமா நல்லவனா



இருக்கமாட்டான்... ம்...சீக்கிரமா போய் ஒளிஞ்சுக்க... நீ மூச்சு காட்டாமே நின்னுட்டிரு... வர்றது யாருன்னு நான் பார்த்துக்கிறேன்."

இருவரும்-

பாய்ந்து - அந்தப் பெரிய பெரிய - காட்ரேஜ் பீரோக்களுக்கு பின்னாடி 'சரே' லென்று பதுங்கிக் கொண்டார்கள். சின்னச் சின்ன பெருமூச்சுகளோடு காத்திருந்தார்கள்.

கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

தொடர்ந்து பேச்சுக்குரல்.

"குமரு! யாராவது இருக்கப் போறாங்க..."

"அதான்... பார்த்துட்டோமே... இன்னும் யாரும் வரலை..."

"சரி... பர்ஸை சட் புட்டுன்னு தேடு... எதையும் அவசரப் பட்டு தொட்டுடாதே... கைக்கு கர்ச்சீப்பை சுத்திக்க..."

குமரு தன் பார்வையை நாலா பக்கமும் போட்டுக் கொண்டே - பூனை நடையோடு உள்ளே வந்தான். பின்னால் காந்தன் தொடர்ந்தான்.

இருவரும் தேட ஆரம்பித்தார்கள். எதையும் தொட்டு விடாமல் சர்வ ஜாக்கிரதையாய் கால் பாவினார்கள்.

"குமரு... அந்த பீரோவுக்கு கீழே பாரு... மொதல் கைகலப்பு பீரோவுக்கு பக்கத்துல தான் நடந்தது... நீதான் அவனை பின்னாடி யிருந்து எகிறி புடிச்சே..."

"ஆமா... ஞாபகம் வருது..."

"பீரோவுக்கு அடியில பாரு..."

குமரு ராகினி இருந்த பீரோவின் பக்கமாய் போனான். அருகே போனதும் மண்டியிட்டு உட்கார்ந்து கீழே குனிந்து பார்த்தான். கீழே கையை விட்டு துழாவினான்.

வெறும் தூசியும் ஒட்டடையும் மட்டுமே - கையோடு வந்தது.

ஏமாற்றமாய் எழ முயன்ற குமரு

'சட்'டென்று நிதானித்தன்.

'என்ன அது...'

'ஏதோ மூச்சிரைப்பு சத்தம்...?'

"காந்தன்..." - குமரு திரும்பி நின்று கத்தினான்.

"என்னடா... பர்ஸ் கிடைச்சதா...?"

"இல்லே... இப்படி என்ன பக்கமா கொஞ்சம் வா..."

- காந்தன் எரிச்சலாய் அவனை நோக்கி வந்தான். "என்னடா...?" சைகையால் அருகே அவனை வரவழைத்து - மெல்லிய குரலில் சொன்னான். "பீரோவுக்கு பின்னாடி யாரோ மூச்சிரைக்கிற மாதிரி சத்தம் கேட்குது"

காந்தனின் முகம் இருட்டுக்குப் போயிற்று.

"மூச்சிரைக்கிற சத்தமா...?"

"ஆமா..."

காந்தன் தன் இடுப்பின் மறைவிலிருந்த



கத்தியை உருவிக் கொண்டான். பீரோவின் இடைவெளியை நோக்கி நகர்ந்தான்.

அதே விநாடி-

பின்புறமாய் ஏதோ நாற்காலி நகர்த்தப் படும் சத்தம்.

இருவரும் 'சடார்' என்று திரும்ப-

மடக்கிற ஸ்டீல் நாற்காலியோடு பிரதீப் தெரிந்தான்.

"குமரு... அவனை மடக்கு..."

குமரு பிரதீப்பை நோக்கி ஓடிவர - பிரதீப் தன் உடம்பின் முழு பலத்தையும் கைக்கு கொண்டு வந்து - ஸ்டீல் நாற்காலியை பக்கவாட்டில் உயர்த்தி - காற்றில் 'ரொய்ங்ங்க்' என்று இறக்கி - குமருவின் நடுமண்டையில் 'நச்' சென்று இறக்கினான்.

விநாடி நேரம் கூட இல்லை.

'ஹக்' என்றலறி - கண்கள் சொருகி - குமரு 'புலுபுலு' வென்று நடு மண்டை யிலிருந்து பச்சை ரத்தம் விட்டான்.

பத்தாவது விநாடியில் தள்ளாடி -

இருபதாவது விநாடியில் கீழே விழுந்தான். ஸ்டீல் நாற்காலி மண்டையை நன்றாக மொத்தியிருக்க - தலை பூராவும் கொழ கொழவென்று ரத்தாபிஷேகம்.

ராகினி பீரோவின் மறைவிலிருந்து திகிலாய் எட்டிப் பார்க்க பிரதீப் கத்தினான். "ராகினி... என்கூட ஓடி... வா..."

சொல்லிக்கொண்டே ஓட ஆரம்பித்து விட்ட - பிரதீப்பின் பின்னால் புயலாய் பாய்ந்தாள் ராகினி.

"தப்...தப்...தப்..."

வாசலை நோக்கி ஓடினார்கள்.

திடுக்கிட்டுப் போன காந்தன் சுதாரித்துக் கொண்டு அவர்களை துரத்த ஆரம்பிக்கும் முன் - ரத்தத்தைப் பெருக்கிக் கொண்டு மயக்கமாய் கிடக்கும் குமருவைப் பார்த்தான்.

'மயக்கமாய் கிடைக்கும் குமரு போலீஸ் கையில் மாட்டினால் அடிக்குப் பயந்து நிச்சயமாய் என்னையும் மருதுவையும் காட்டிக் கொடுத்து விடுவான்... இவனை ஒரேடியாக தீர்த்துவிட்டால் என்ன...?'

இந்த எண்ணம் தோன்றிய அடுத்த விநாடியே தன் கையிலிருந்த கத்தியை மயக்கமாய் கிடந்த குமருவின் நெஞ்சில் சொருகி எடுத்தான் காந்தன்.

குமரு ஒரு சின்ன துள்ளலோடு - சில விநாடிகள் துடித்துவிட்டு மெல்ல அடங்கி னான். காந்தன் பிரதீப்பையும் ராகினியையும் துரத்திக் கொண்டு வெளியே பாய்ந்தான்.

## 6

மங்களின் வீட்டைவிட்டு வெளியே வந்து ஓட ஆரம் பித்த பிரதீப் ஒரு விநாடி பித்த பிரதீப் ஒரு விநாடி யோசித்துவிட்டு சொன்னான். "ராகினி... ரோட்டுப் பக்கம் ஓடினா நிச்சயமா அவன் கிட்டே மாட்டிக்கு வோம்... வலது கை பக்கமா ஏதோ மலைச் சரிவு மாதிரி தெரியுது... அந்தப் பக்கமா ஓடினா எப்படியும் தப்பிச்சுக்கலாம்..."

ராகினி தன் அகன்ற கண்களில் மிரள மிரள பார்த்துக் கொண்டு - எச்சில் விழுங்கி பிரதீப்பைப் பார்த்தாள்.

"எனக்கு பயமாயிருக்குங்க... அவன் ஏதாவது உங்களை பண்ணிடுவான்... மொதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்கு போலாம் வாங்க..."

"இந்த இடத்துல போலீஸ் ஸ்டேஷன் ஏது... ராகினி... மொதல்ல அவன் பார்வை யிலிருந்து தப்பிச்சுட்டு... அப்புறம்தான் போலிஸ் ஸ்டேஷனுக்கு போக முடியும்... இப்போ.., எம்பின்னாடி ஓடிவா..." சொல்லிக் கொண்டே பிரதீப் அந்த மலைச் சரிவை நோக்கி ஓட - ராகினி தொடர்ந்தாள்.

மலைச் சரிவு தோட்டப் பயிர்களோடு-

ஸ்டெப் கட்டிங் தலைமாதிரி வர - காலை நேரப் பனி அங்கங்கே கும்பல் கும்பலாய் நின்று கலையலாமா... வேண் டாமா... என்று யோசித்துக் கொண்டிருந்தது. குளிர் திட்டமாய் உடம்புக்குள் பாய்ந்தது. பனியினால் ஈரமாகிப்போன சரிவில் பிரதீப்பும், ராகினியும் ஜாக்கிரதை காத்து இறங்கினார்கள்.

"என் கையைப் பிடிச்சுக்கோ ராகினி..."

"அவன் பின்னாடி வர்றாரு பாருங்க..."

பிரதீப் திரும்பிப் பார்க்க

காந்தன் ஐம்பதடி தூரத்தில் - சரிவில் - வேகவேகமாய் இறங்கிக் கொண்டிருந்தான்.

"வர்றான்..."

"சீக்கிரம் வாங்க... ரோட்டுச் சரிவுக்கு போயிட்டா... ஏதாவது பஸ்ஸோ லாரியோ வரும். பிடிச்சு போயிடலாம்..."

"ராகினி...!"

"ம்..."

"அவன் ஒருத்தன்தானே வர்றோன்... எதிர்த்து நின்னு சமாளிச்சுடலாமா...?"

"வேண்டாங்க... அவன் கையில கத்தி வெச்சிருக்கான்..."

சரிவில் 'மடமட' வென்று இறங்கினார்கள்.

சமவெளி வந்தபோது - மரங்களுக்கு மத்தியில் வேக வேகமாய் ஓடினார்கள்.

கிட்டத்தட்ட அரைமணி நேர-ஓட்டத்திற்கு பிறகு- மண்ரோட்டுச் சரிவில் அந்த சின்ன பங்களா பனித் திட்டுகளுக்கு மத்தியில் தெரிந்தது.

அந்த பங்களாவை நோக்கி - வாயிலும், மூக்கிலும் மூச்சிரைத்துக் கொண்டு 'தப...தப...' வென்று ஓடினார்கள் பிரதீப்பும் ராகினியும்.

காந்தன் கையில் கத்தியோடு - அதே மூர்க்கத்தோடு தொடர்ந்து கொண்டிருந்தான். உடம்பில் இன்னமும் கோபம் கூடியிருந்தது.



## 7

கொடைக்கானலுக்கு போகும் மதுரை பஸ் சில்வர் காஸ்கோட்டில் நின்றது. கண்டக்டர் கத்தினார்.

"யாரோ சில்வர்காஸ் கோட்ல இறங்கணும்ன்னு சொன்னாங்களே... யார் ஸார் அது...? சீக்கிரமா இறங்குங்க..."

ஒரு சின்ன சூட்கேஸையும் - ஏர்பேக்கையும் சுமந்து கொண்டு - கனமான உல்லன் ஸ்வெட்டர்களில் விவேக்கும் ரூபலாவும் இறங்கினார்கள். காலை எட்டு மணி.

"இதென்ன கொடைக் கானலா...? ஐஸ்துண்டா...? எவரெஸ்ட்ல கால் வெச்ச மாதிரி இருக்கு...!" ரூபலா பல்லைக் கிட்டிக் கொண்டே பேசினாள்.

விவேக் சிரித்தான்.

"எவரெஸ்ட்டுக்கு நீ போயிருக்கியா... ரூபலா?" - கேட்ட விவேக்கை முறைத்து பார்த்து விட்டு ஏர்பேக்கை தன் தோளுக்கு ஏற்றிக் கொண்டாள் ரூபலா. "சீக்கிரம் உங்க ப்ரெண்டோட வீட்டைக் கண்டு பிடியுங்க... ஆவி பறக்க பறக்க சூடா காப்பி சாப்பிடணும் போலிருக்கு..."

"பக்கம்தான்... அந்த வளைவுல திரும்பினா மொதல் வீடு..."

நடந்தார்கள்.

வளைவில் அந்த சீமை ஓடு வேய்ந்த வீடு வந்தது. வீட்டைச் சுற்றிலும் தைல மரக்

கன்றுகள். ரோஜா பதியன்கள். செம்மண் பாத்திகளில் கல்வாழைச் செடிகள்.

"அதான் உங்க ப்ரெண்டோட வீடா...?"

"ஆமா..."

"அவர் பேரு என்னான்னு சொன்னீங்க...?"

"குருநாதன். ஆனா காலேஜ் டேஸிலிருந்தே நான் அவனை 'குரு'ன்னு கூப்பிட்டுத்தான் பழக்கம்..."

"கொடைக்கானல்ல என்ன பண்றார்...?"

"போர்வையை போர்த்துகிட்டு குளிர் காய்ஞ்சுட்டிருக்கான்."

"என்ன சொல்றீங்க...?"

"என்ன ரூபலா... பஸ்ஸில வரும்போது தானே சொன்னேன்...? அவன் ஆப்பிள் ரிசர்ச் ஸ்டேஷன்ல ரிசர்ச் டெக்னிகல் அஸிஸ்டெண்டா இருக்கான்னு சொன்னேன். அதுக்குள்ளே மறந்துட்டியா...?"

"பஸ்ஸில நான் தூங்கிட்டு வரும்போது... நீங்க சொல்லியிருப்பீங்க..."

"தூங்கு மூஞ்சி..." என்று திட்டிக் கொண்டே வீட்டில் காம்பௌண்ட் கேட்டைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான் விவேக். ஸ்கூட்டர் ஒன்று பனியில் நனைந்தபடி நின்றிருக்க - அதைத் தாண்டிப் போய் - வாசற்படியேறி - கதவின் மேலிருந்த காலிங் பெல்லைத் தேய்த்தான்-



சில விநாடிகளில் கதவு திறக்க -

திறந்த கதவுக்குப் பின்னால் - வாயில் டூத்பேஸ்ட் நுரையோடு அந்த இளைஞன் தெரிந்தான். அப்போதுதான் தூங்கி எழுந்திருந்திருக்க வேண்டும். கண்களில் தூக்கம் மிச்சமிருந்தது. விவேக்கையும் ரூபலாவையும் பார்த்து பிரகாசமானான்.

"வாடா க்ரைம் பிராஞ்ச மன்னா...! வாங்க சிஸ்டர்...!" வாஷ் பேசினுக்கு போய் வாயை அவசர அவசரமாய் கொப்பளித்து விட்டு வந்தான் அந்த குரு.

"என்னடா... திடீர்னு... ஆச்சர்யம் நெஞ்சை அடைக்குது" சுவரோரமாய் இருந்த நாற்காலிகளை இழுத்துப் போட்டான்.

"மதுரைக்கு ஒரு இன்வெஸ்டிகேஷன் விஷயமா வந்தேன்... நான் எக்ஸ்பெக்ட் பண்ணிட்டு வந்து ஆள் ஊர்ல இல்லை. டெல்லி போயிருக்கானாம்... மூணுநாள் கழிச்சுதான் வருவானாம். மதுரையில மூணுநாள் சும்மா உட்கார்ந்துட்டிருக்க முடியுமா...? அதான் வாழ்க்கைத் துணை மயிலோடு பொழுதை விரட்டியடிக்க - கொடைக்கானல் வந்தேன்... நீயும்தான் எனக்கு கல்யாணம் ஆன நாள்லேயிருந்து கொடைக்கானலுக்கு, 'வா...வா...'ன்னு லெட்டர் போட்டு கூப்பிட்டிருக்கே..."

"வந்ததுக்கு ரொம்ப தாங்க்ஸ்..."

"நீ எப்படா குரு கல்யாணம் பண்ணிக்கப் போறே...?"

"வீட்ல பொண்ணு பார்த்துட்டிருக்காங்க..."

"கவர்மெண்ட் பஞ்சாயத்து தேர்தலைக் கூட வெச்சு முடிச்சுட்டாங்க... உங்க வீட்ல உனக்கு இன்னும் பொண்ணு பார்த்து முடியலையா... அகில உலகக் கொடுமையடா இது... உன் தலையோட முன் பக்கம் வேறே பாலைவனமா மாறிட்டு போகுது..."

"சரி,... சரி... வந்ததும் வராததுமா என்னோட தலைமுடியைப் பத்தி கவலைப்படாதே... காப்பி போடட்டுமா...? டீ போடட்டுமா...?"

"காப்பி..."

விவேக் சொன்ன அதே விநாடி-

வீட்டுக்கு கொஞ்சம் தொலைவிலிருந்து அந்த கூக்குரல் எழுந்தது.

"அய்யோ... சின்ன எஜமான்..."

அந்தக் குரலில் இருந்த அவலம், பதட்டம், விவேக்கை நிமிர்ந்து உட்கார வைத்தது. வேகமாய் ஜன்னலருகே போனான். எட்டிப் பார்த்தான்.

கார் தெரிந்த அந்த பங்களாவின் போர்டிகோ வாசலில் - தலையில் கம்பளிக் குல்லாய் வைத்த அந்த வேலையாள் தனியாய் நின்று அரற்றிக் கொண்டிருந்தான்.

"என்னடா குரு... யார் அது...?"

"அது மங்களோட பங்களா..."

"மங்கள்?"



"ஆமா... அவன் ஒரு ஆர்ட்டிஸ்ட்... பணக்காரன். அவன் வீட்டு வேலையாள் எதுக்காக இப்படி அழறான்னு தெரியலையே... ஏதோ சம்திங் ராங்..."

"வா...போய் பார்ப்போம்..."

ரூபலாவை அங்கேயே இருக்கவிட்டு - கொஞ்சம் தள்ளியிருந்த மங்களின் பங்களாவை நோக்கி ஓட்டமும் நடையுமாய் போனார்கள். அவர்களைப் பார்த்துவிட்ட வேலையாள் வேகவேகமாய் வந்து எதிர் பட்டான். குரு கேட்டான்.

"என்ன லிங்கசாமி...?"

அவனுடைய உதடுகள் கலவரமாய் துடித்தது. "ஸார்... எங்க...சி... சின்ன எஜமானை யாரோ குத்தி கொன்னிருக்காங்க... பக்கத்துல இன்னொருத்தனும் செத்து கிடக்கிறான்."

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் -

விவேக் முதல் ஆளாய் வீட்டிற்குள் பாய்ந்தான். இரண்டு அறைகளைத் தாண்டி உள்ளறைக்கு போனதும் நடையை அதிர்ச்சியோடு நிறுத்தினான். பின்னால் வந்த குருவும் திடுக்கிட்டு போய் நின்றான். விவேக் லிங்கசாமியை கையசைத்துக் கூப்பிட்டான். மங்களைக் காட்டி கேட்டான்.

"இவர்தான் உங்க எஜமானா?"

"ஆமா ஸார்..."

"இவன்?" குமருவின் பிணத்தைக் காட்டி கேட்டான்.

"தெரியலை ஸார்..."

"எந்த பாடியையாவது தொட்டியா...?"

"வேலைக்கு... வந்ததும்... ஒரு வேகத்துல ஓடிப்போய் சின்ன எஜமானைத் தொட்டு தூக்கிட்டேன் ஸார்."

"நீ எப்பவும் இந்த நேரத்துக்குத்தான் வேலைக்கு வருவியா...?"

"ஆமா... ஸார்..."

"ஏன் அப்படி...?"

"அய்யா ராத்திரி பூராவும் படம் வரைஞ்சுட்டு விடியற்காலை மூணு மணிக்குத்தான் தூங்கப் போவார்... எட்டு மணிக்கு மேலே தான் கண் முழிப்பார்... எட்டு மணிக்கு முன்னாடி வேலைக்கு வரவேண்டாம்ன்னு என்கிட்டயே சொல்லியிருக்கு...?"

"சரி... இந்த வீட்ல போன் எங்கேயிருக்கு...?"

"பக்கத்து ரூம்ல இருக்கு ஸார்..."

அவன் கை காட்டிய அறை பக்கமாய் நடந்தான் விவேக். அறைக்குள் நுழைந்து - டேபிளின் மேலிருந்த டெலிபோனின் ரிஸீவரைப் பிரித்தெடுத்து - போலீஸுக்கு டயலைச் சுழற்றினான். லைன் கிடைத்ததும் தகவல் தெரிவித்து விட்டு திரும்பினான்.

கதவோரமாய் கிடைந்த அந்த பொருளின் மேல் பார்வை நிலைத்தது.

போய் எடுத்தான்.

மட்டமான ரெக்ஸின் உறையாலான ஒரு மணிபர்ஸ்.



# 8

அந்த பங்களாவைப் பார்த்ததும் 'சட்'டென்று நின்றார்கள் பிரதீப்பும் ராகினியும். பிரதீப்பும் ராகினியும். பிரதீப் மூச்சிரைத்துக் கொண்டே கேட்டான்.

"ராகினி... அந்த பங்களாவுக்கு போயிடலாமா...? நிச்சயமா அங்கே யாராவது இருப்பாங்க..."

"ம்... ம்..." தலையாட்டின ராகினி சேலையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு பிரதீப்பை பின் தொடர்ந்து ஓடினாள். "இனி பயமில்லை... எப்படியாவது அந்த மூர்க்கனிடமிருந்து தப்பித்து விடலாம்..."

மூச்சைப் பிடித்துக் கொண்டு - இருவருமாய் ஓடி - அந்த பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்தார்கள்.

போர்டிகோ வாசற்படிகளில் உட்கார்ந்த படி-ஒரு பாமரேனியன் நாய்க் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்த அந்த நடுத்தர வயதுப் பெண் இவர்களைப் பார்த்ததும் - குழப்பமாய் எழுந்தாள். கொண்டை போட்டு அகலமான நெற்றியில் பொட்டு வைத்து களையாய்த் தெரிந்தாள். பயமாய் கேட்டாள்.

"யார்...நீங்க...?"

பிரதீப் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே சொன்னான். "மேடம்... நாங்க இந்த கொடைக்கானலுக்கு ஹனிமூன் வந்தகப்புள்ஸ்... ஒரு ரௌடி எங்களை தொரத்திட்டு வர்றான்..."

"எதுக்காக தொரத்தறான்...?"

"எல்லா விபரத்தையும் அப்புறமா சொல்றோம் மேடம்... மொதல்ல நாங்க எங்கேயாவது ஒளியணும்..."

"உள்ளே போங்க..." என்றாள் அவள்.

அப்படி அவள் சொன்னதுமே - திறந்திருந்த கதவின் வழியாக வீட்டுக்குள் பாய்ந்தார்கள் ராகினியும் பிரதீப்பும்.

அந்தப் பெண் மறுபடியும் -பாமரேனியன் நாய்த்தலையைக் கோதிக் கொண்டே போர்டிகோ வாசற்படிகளில் உட்கார்ந்தாள்.

சரியாய் இரண்டாவது நிமிஷம்-

காம்பௌண்ட் கேட் அருகே காந்தன் தலை தெரிந்தது. பார் வையை உள்ளே போட்டு பரக்க பரக்கத் தேடினான். அந்தப் பெண் கேட்டாள்.

"யாருப்பா அது...?"

காந்தன் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். அவள் கையிலிருந்த பாமரேனியன் நாய் - அவனைப் பார்த்ததும் - தன் சின்ன சிவப்பான வாயைத் திறந்து லோ வால்யூமில் கத்தியது. காந்தன் அந்தக் கத்தலை பொருட்படுத்தாமல் -அவளை நெருங்கினான். கேட்டான்.

"ரெண்டு பேர் இந்தப் பக்கமா ஓடி வந்தாங்க்ளா...?"

"ரெண்டு பேரா...?"

"ஆமாம்,.. ஒரு ஆண்... ஒரு... பெண்..."



"அப்படி யாரும் இந்தப் பக்கமா வரலையை..."

"பங்களாவுக்குள்ளே நுழைஞ்சதை நான் பார்த்தேனே...?"

"நான் இதே போர்டிகோவில்தானே உட்கார்ந்துட்டிருக்கேன்... அப்படி வந்த வங்க என்னை மீறி எப்படி உள்ளே போயிருக்க முடியும்?"

காந்தன் சந்தேகமாய் சுற்றும் முற்றும் பார்த்தான். அந்தப் பெண் கேட்டாள். "அவங்களை நீ எதுக்காக தொரத்திட்டு வர்றே...?"

"அதையெல்லாம் உங்ககிட்டே சொல்லிட்டிருக்க முடியாது." என்று சொன்னவன் திரும்பி காம்பௌண்ட் கேட்டை நோக்கி நடந்தான். "அந்த ரெண்டு பேரும் இந்த எல்லையை விட்டு எப்படி போயிடு வாங்கன்னு பார்க்கிறேன்..."

அவன் பார்வையிலிருந்து மறையும் வரை காத்திருந்த அந்தப் பெண் - நாய்க்குட்டியோடு உள்ளே போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

## 9

"கொடைக் கானல்ல கால் வெச்சு கால்மணி நேரம் கூட ஆகலை... அதுக் குள்ளே கேஸா...?" ரூபலா கொஞ்சம் கோபமாய் கேட்க விவேக் புன்னகைத்தான்.

"கடமை என்னை துரத்துகிறது... நான் என்ன செய்யட்டும்...? 'கொடைக்கானலில்

ஒரு கொலை' - இந்த தலைப்பை ராஜேஷ் குமார் கிட்டே சொன்னா போதும் மனுஷன் ஏதாவது ஒரு மாச நாவலுக்கு எழுதிடுவார்..."

ரூபலா விவேக்கிடம் திரும்பினாள்.

"இப்போ... நீங்க கொடைக்கானல் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமாரை பார்க்கப் போறீங்க...?"

"ஆமா..."

"அப்போ நானென்ன பண்ணட்டும்...?"

"மத்தியான சமையலை ப்ரிபேர் பண்ணு... நான் ஸ்டேஷனுக்குப் போறேன். குரு ரிசர்ச் ஸ்டேஷனுக்கு வேலைக்கு போகட்டும்... மத்தியானம் ஒரு மணிக்கு ரெண்டு பேரும் சாப்பாடு கொட்டிக்க வந்துடறோம்..."

"சமையலை முடிச்சுட்டா எனக்கு போர் அடிக்குமே..."

குரு குறுக்கிட்டான்.

"சிஸ்டர்... அடுத்த ரூம்ல டி.வி. இருக்கு... இன்னும் கொஞ்ச நேரம் போனா... இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் லைவ் டெலிகாஸ்ட் வரும்... இந்தியா எவ்வளவு அழகா பாகிஸ்தான்கிட்டே தோற்கிறாங்கன்னு பார்க்கலாமே...?"

ரூபலா சிரித்துக் கொண்டே தலையாட்ட-

விவேக்கும் குருவும் வெளியே வந்த ஸ்கூட்டரில் பரவினார்கள். குரு ஸ்கூட்டரை ஓட்டினான்.



ஒரு பதினைந்து நிமிஷ பயணத்திற்குப் பின் -

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் இறங்கிக் கொண்டான் விவேக். "சரியா ஒரு மணிக்கு வா குரு... உனக்காக வெயிட் பண்ணிட்டிருப்பேன்..."

குரு நகர்ந்ததும் - ஸ்டேஷனுக்குள் நுழைந்தான் விவேக். இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமார் ஒரு புன்னகையோடு எழுந்து நின்று கை குலுக்கி வரவேற்றார்.

"ஓய்வுக்காக வந்த இடத்துல ஒரு கேஸ்..."

"வர்ட்ஸ் தேர்...? பை...த...பை... இன்ஸ்பெக்டர்... அந்த ரெண்டு பாடியையும் போஸ்ட் மார்ட்டம் கொண்டு போயிட்டீங்களா...?"

"மார்ச்சுவரியில இருக்கு ஸார்..."

"ஆர்ட்டிஸ்ட் மங்கள்... இங்கே ரொம்பவும் பிரபலமானவரா...?"

"ஓரளவுக்கு..."

"அவரோட ஃபாதர் ஏதோ வெளி தேசத்தல இருக்கிறதா சொன்னீங்களே? எந்த கண்ட்ரி...?"

"அமெரிக்கா..."

"அவர்க்கு தகவல் கொடுத்திட்டீங்களா...?"

"கொடுத்தாச்சு ஸார்...?"

"செத்த இன்னொரு ஆசாமியோட பேரு குமரு. மங்கள் வீட்ல இந்த பர்ஸ்

மட்டும் கிடைக்காமே இருந்தா... இந்த விவரமும் தெரிஞ்சிருக்காது..." சொல்லிக் கொண்டே அந்த பர்ஸை பாக்கெட்டி னின்றும் எடுத்து பிரித்தான் விவேக்.

பர்ஸின் கண்ணாடி உறைக்குள்-குமரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவில் நேர் பார்வை பார்த்தான். பர்ஸின் உள் அறைக்குள் கையை விட்டு- நான்காய் மடித்து வைத் திருந்த அந்த தபால் கார்டை எடுத்தான்.

மறுபடியும் படித்தான்.

அன்புள்ள குமருவுக்கு,

உன் அம்மா எழுதிக் கொள்வது. உன்னிடமிருந்து இரண்டு மாதமாகவே கடிதம் இல்லை. உன் தங்கை மாரியம்மன் பண்டிகைக்காக தன் புருஷனோடு வீட்டிற்கு வந்திருக்கிறாள் 'நீயும் வந்துவிட்டுப் போனால் எனக்கு சந்தோஷமாக இருக்கும்.

இப்படிக்கு உன் அம்மா.

கார்டில் ப்ரம் அட்ரஸ் இல்லை. கார்டின் வலதுபக்க நெற்றியோரமாய் 'கோராபூர்' என்கிற ஊரின் பெயரும் கீழே தேதியும் தெரிந்தது.

"கோராபூர்... இது எங்கே இருக்கு...?"

"பக்கம்தான் ஸார்..."

"அந்த அம்மாவோட பேர் தெரியாமே... அட்ரஸை எப்படி விசாரிக்க முடியும்?"

"குமருவோட கொடைக்கானல் அட்ரஸைக் கிளறினா... தகவல் ஏதாவது



மாட்டலாம் ஸார்... நீங்க வர்றதுக்காகத்தான் காத்திட்டிருந்தேன்..."

போஸ்ட் கார்டில் இருந்த குமருவின் அட்ரஸை வாய்விட்டுப் படித்தான் விவேக். "கே.குமரு, கேர் ஆப் ராயர் ரொட்டிக்கடை, நெம்பர் பதினாறு, வில்பட்டி ரோடு, கொடைக்கானல். இந்த அட்ரஸ் பக்கம் தானே...?"

"வெரி நியர் ஸார்... ஜீப் போனா அஞ்சு நிமிஷத்துல போயிடலாம்..."

புறப்பட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமார் சொன்ன மாதிரியே - ஜீப்பில் ஐந்து நிமிஷம் பயணித்து - வில்பட்டி ரோட்டில் இருந்த ராயர் ரொட்டிக் கடையைத் தொட்டார்கள். ராயர் காது குடைவதில் தீவிரமாய் இருந்தார்.

ராயர் ரொட்டிக்கடையும், ராயரும் பழமை நெடி அடித்தார்கள். போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் - ராயர் காது குடை வதை கான்சல் செய்து விட்டு எழுந்தார்.

விவேக் அவரை நெருங்கினான்.

"இங்கே குமரு யாரு...?"

"மேலே மாடி ரூம்..." ரொட்டிக்கடையை யொட்டி 'ட' போட்டுக் கொண்டு போன மாடிப்படிகளைக் காட்டினார் அவர் விவேக்கும் இன்ஸ்பெக்டரும் மாடிப்படிகளில் தட தடத்து- மேலே இருந்த அந்த அறையைத் தொட்டார்கள். தகரத்தால் ஆன கதவில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிளுக்கு கண்ணைக் காட்ட-

கான்ஸ்டபிள் கையோடு கொண்டு போயிருந்த சுத்தியால் பூட்டின் தலையைத் தட்டினார். பலஹீனமான அந்த பிளாட்பார பூட்டு 'ப்ளக்' கென்று கழன்று கொள்ள - கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனர்கள்.

சின்ன அறை.

எட்டுக்கு எட்டு இருந்தாலே அதிகம். அறையின் நடுவே ஓடிய கயிற்றில் - ஸ்வெட்டர் ஒன்று வெளவால் மாதிரி தொங்கிக் கொண்டிருந்தது. சுவரோரமாய் காலி செய்யப்பட்ட பிராந்தி குவார்ட்டர் பாட்டில்கள். சுவரில் ஒரு" சினிமா நடிகை யின் பாதி மார்புகளும் முழு தொப்புளும் இலவசமாய் தரிசனம் தந்து கொண்டிருந்த ஒரு காலண்டர். அதற்கு நேர் கீழே சின்னதாய் ஒரு மர பீரோ.

பீரோ திறந்திருந்தது.

விவேக் கிளறினான்.

நாப்தலின் வாசத்தோடு நான்கைந்து பேண்ட் சர்ட்டுகள், பனியன்கள், ஜட்டிகள் அவைகளுக்கு கீழே சரோஜாதேவியின் புஸ்தகங்கள்.

விவேக்கிற்கு நிமிஷ நேரத்தில் புரிந்து போயிற்று.

இந்த அறையைக் கிளறுவதில் எந்த உபயோகமும் இல்லை. ரொட்டிக் கடை



ராயரின் வாயைக் கிளறினாலாவது ஏதாவது தகவல் கிடைக்கலாம்.

விவேக் கீழே இறங்கி வந்தான்.

ராயர் மறுபடியும் காது குடைவதை- ஒத்தி வைத்துவிட்டு எழுந்தார்.

"குமரு... எங்கே போயிருக்கான்னு தெரியுமா ராயரே...?"

ராயர் சலித்துக் கொண்டார். "அவன் எங்கே போறான்...? எப்போ வர்றான்னு யாருக்குத் தெரியும்... திருட்டுப் பய... கையில காசிருந்தா... பாட்டில் பாட்டிலா குடிச்சுகிட்டு ரூம்லேயே விழுந்து கெடப் பான்... கையில காசு நடமாட்டம் இல் லேன்னா... ஏதாவது ஒரு விட்டுப் பக்கம் தேட்டை போடப் போயிடுவான்...! எனக்கு தெரியும் என்னிக்காவது ஒரு நாள் போலீஸ் ஜீப் என் கடை முன்னாடி வந்து நிக் கும்ன்னு..."

"அவனை நீங்கதான் வாடகைக்கு வெச்சிருக்கீங்களா...?"

"ஆமா... நல்லவன்னு நினைச்சு ஏமாந்து போய் முன்னூறு ரூபாய் வாடகைக்கு அந்த வீட்டைக் குடுத்தேன்... பாவிப்பய... இப்போ வாடகையும் தராமே... காலியும் பண்ணாமே என்னோட உயிரை வாங்கறான்..."

மாடிப் படிகளில் இறங்கி வந்து கொண் டிருந்த இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமாரை ஏறிட்டான் விவேக். "இன்ஸ்பெக்டர்... கொலைக்கான மோடிவ் கிடைச்சாச்சு..."

"என்ன ஸார்...?"

"குமரு ஒரு திருட்டுப் போர்வழி... மங்கள் அவரோட வீட்ல தனியா இருக்கிறதை தெரிஞ்சுகிட்டு... இந்த குமரு திருடப் போயிருக்கணும்... போன இடத்துல கைகலப்பு... ரெண்டு பேருமே ஒருத்தரையொருத்தர் தாக்கி கிட்டதுல... மரணமடைஞ்சிருக்கலாம்..."

"யூ... ஆர் கரெக்ட் ஸார்... அப்படித்தான் நடந்திருக்கணும்..."

## 10

பங்களாவின் உள் அறைக்குள் ஓடி சுவரோரமாய் மூச்சு வாங்கிக் கொண்டு நின்றார்கள் பிரதீப்பும் ராகினியும். கொடைக்கானலின் அந்தக் குளிரிலும், இருவரின் முகங்களிலும் வியர்வை முத்து முத்தாய் அரும்பியிருந்தது.

ராகினியின் குரல் அழு கையில் வெடித்தது.

"நான் எவ்வளவோ சொன்னேன் நீங்க கேக்கலை... இப்போ பாருங்க மங்களோட விவகாரத்துல எக்கச்சக்கமா மாட்டிகிட்டோம்..."

"இப்படி ஆகும்ன்னு யார் நினைச்சா...?"

"அந்த ஆளை அப்படி அடிச்சு போட்டீங்களே...? செத்து கித்து போயிருந்தா...?"

பிரதீப் பயமாய் எச்சில் விழுங்கினான்.

"அப்படியெல்லாம்... இருக்காது..."



"இல்லீங்க... அவன் செத்துதான் போயிருப்பான்... ரத்தத்துல துடிச்சு... கொஞ்சம் கொஞ்சமா அடங்கினதை நானே பார்த்தேன்..."

"இதோ பார் ராகினி... நான் ஏற்கெனவே கலவரப்பட்டு போயிருக்கேன்... நீ அதையும் இதையும் சொல்லி இன்னும் என்னைக் கலவரப்படுத்தாதே... கொஞ்ச நேரம் போசாம இரு வாசல்ல ஏதோ சத்தம் கேட்குது... அந்த அம்மா... அவன் கூடத்தான் பேசிட்டிருக்காங்க போலிருக்கு..."

சில நிமிஷங்கள் வரை இருவரும் - மௌனம் -

அனுஷ்டித்தார்கள்.

பிறகு அந்தப் பெண் உள்ளே வந்து கதவைச் சாத்தினதும் வாயைத் திறந்தார்கள். "அவன் போயிட்டானா...?"

அந்தப் பெண் பாமரேனியனின் தலையை மெத்மெத்தென்று வருடிக் கொண்டே-முகத்தில் சிரிப்பைக் காட்டாமல் கேட்டாள்.

"அவன் உங்களை எதுக்காக தொரத்திட்டு வந்தான்...?"

"அ... அது வந்து... இவ போட்டிருக்கிற நகைக்காக..." பிரதீப்பின் குரல் தடுமாறியது.

அந்தப் பெண் புன்னகைத்தாள். "வந்தவன் நகைக்காக தொரத்திட்டு வந்தவன் மாதிரி தெரியலையே...? அவனுக்கும் உங்களுக்கும் மத்தியில என்னமோ இருக்கு.

அதை நீங்க என்கிட்டே சொல்லலயானாலும் பரவாயில்லை... ரொம்பவும் வேர்த்து விறுவிறுத்துப்போய் - ஓடி வந்திருக்கீங்க... என்ன சாப்பிடறீங்க...?"

"ஒண்ணும் வேண்டாம்..."

"பரவாயில்லை... சொல்லுங்க... எப்படியும் இந்த வீட்ல ஒரு மணி நேரமாவது ஒளிஞ்சிருக்கணும்... ஏதாவது சாப்பிடலாமே...! டீ...ஆர்... காபி...?"

பிரதீப் ராகினியைப் பார்த்தான்.

அவள் 'காபி' என்றாள்.

"உட்கார்ங்க... கொண்டு வர்றேன்..." அந்தப் பெண் நாய்க் குட்டியோடு உள்ளே போனாள். இரண்டு பேரும் அங்கிருந்த சோபாவில் சாய்ந்தார்கள்.

ராகினியின் பெருமூச்சுகள் இப்போது அடங்கியிருந்தது. கணவனின் காதருகே மெல்ல கிசுகிசுத்தாள் "என்னங்க இந்த வீட்லயாரையும் காணோம்...?"

"உள்ளே இருப்பாங்க..."

"அந்தப் பெண்ணைத் தவிர வேற யாரும் இருக்கிற மாதிரி தெரியலைங்க..."

"யார் இருந்தா என்ன...? இல்லாமே போனா என்ன...? வெளியே இருக்கிற ஆபத்து போகிற வரை நாம் இங்கே இருந்துதான் ஆகணும்..."

அவன் சொல்லிக் கொண்டிருந்த அதே வினாடி-



பக்கத்து மேஜையின் மேலிருந்த டெலிபோன் 'டிங்க்' என்றது. ஒரே ஒரு ஒற்றைச் சத்தம்.

பிரதீப் அந்தப் போனையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ராகினியிடம் திரும்பினான். கிசுகிசுத்தான்.

"ராகினி..."

"என்னங்க...?"

"அப்படி கதவு பக்கமா நின்னுட்டு உள்ளேயிருந்து யாராவது வர்றாங்களான்னு பார்த்துக்க..."

"ஏன்... இப்போ... என்ன பண்ணப் போறீங்க...?"

"அந்த டெலிபோன் ரிஸீவரை எடுத்து ஒட்டு கேக்கப் போறேன்... உள்ளே போன அந்தப் பொண்ணு... அங்கேயிருக்கிற போன் மூலமா...யார் கூடவோ பேசறா..."

"அவ யார் கூடவோ பேசிட்டு போகட்டும்...? உங்களுக்கென்ன வந்தது...? இப்பத்தான் ஒரு இக்கட்டிலிருந்து மாட்டி-குற்றுயிரும், கொலையுயிருமா வெளியே வந்திருக்கோம். அதுக்குள்ளே இன்னொன்னுல மாட்டிக்கணுமா...?"

"எனக்கென்னமோ... இந்த பொன்னு மேலே லேசா சந்தேகம் தட்டுது. அவ பார்வையிலும், பேச்சிலும் ஒரு கபடம் தெரியுது... யாராவது வர்றாங்களான்னு நீ பார்த்துக்க... நான் ரிஸீவரை எடுத்து அவ என்ன பேசறான்னு கேக்கறேன்..."

பிரதீப் மெதுவாய் நடந்து போய்- ரிஸீவரை சத்தமில்லாமல் எடுத்து காதுக்குக் கொடுத்தான். ராகினி அறை வாசலில் நின்று கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

ரிஸீவரில் இரு குரல்கள் மாறி மாறிக் கேட்டது. ஒரு ஆண்குரல். ஒரு பெண் குரல். ஆண் குரல் கேட்டது.

"என்ன புவனேஸ்வரி... நான் இப்பவே வரணுமா? ஒரு மணிநேரம் கழிச்சு வர்றேனே..."

"மாட்டிகிட்ட மைனா பறந்து போயிடும் போலிருக்கு ஜேக்கப் இந்த நேரம் பார்த்து தங்க முத்து வீட்ல வேற இல்லை..."

"எங்கே போயிருக்கான்?"

"மதுரைக்கு... அதான் உன்னைக் கூப்பிடறேன்..."

"சரி நம்ம வழக்கமான காப்பியை அவங்களுக்கு கொடுத்திட்டியா...?"

"இனிமேத்தான் கொடுக்கப் போறேன்..."

"குடு... நான் இப்போ... வந்துடறேன்... ஆனா ஒரு கண்டிஷன்...?"

"என்ன..."

"மொதல் மொதல்ல மைனாவை நான்தான் தொடுவேன்... அப்புறம்தான் நீ பார்ட்டிகளை கூப்பிடணும்..."

"சரி... வா..."

ரிஸீவரை சாத்தும் சத்தம் கேட்டு - பிரதீப்பும் ரிஸீவரை சாத்தினான். அவன் முகம் நிறமிழந்து போயிருந்தது.



ராகினி அவனை நெருங்கினாள்.

"என்னங்க... என்னமோ மாதிரி ஆயிட்டீங்க...?"

"ரா...ராகினி...நாம உடனே இங்கிருந்து போயாகணும்..."

"ஏங்க..."

"வெளியே...வா...சொல்றேன்..."

பிரதீப் கதவை நோக்கி ஓட-

ராகினியும் அதே வேகத்தோடு-

தொடர்ந்தாள்.

## 11

போஸ்ட்மார்ட்டம் ரிப் போர்ட்கள் மேஜையின் மீது -பேப்பர் வெயிட்டின் உதவியோடு - பறந்து போகாமல் காற்றில் படபடத்துக் கொண்டிருக்க - எதிரெதிரே உட்காரந்திருந்த விவேக்கும், இன்ஸ் பெக்டர் ஹேமந்த் குமாரும் டாக்டர் சொன்னதைக் கேட்டு - முகம் நிறைய திகைப்பு வாங்கினார்கள்.

"என்ன டாக்டர் சொல்றீங்க...? மங்கள் இறந்த நேரமும், குமரு இறந்த நேரமும், வெவ்வேறு நேரமா...?"

"எஸ்... மங்கள் இறந்து ஏழுமணி நேரத்துக்குப் பின்னாடிதான் அந்த குமரு இறந்திருக்க வேண்டும்... அதாவது மங்கள் ராத்திரி பனிரெண்டு மணிக்கு கொல்லப் பட்டிருக்கிறார். குமரு காலையில ஏழு மணிக்கு மரணத்தை தொட்டிருக்கிறான்...".

விவேக் இன்ஸ்பெக்டரிடம் திரும்பினான் "அப்போ... நம்ம கன்க்ளூஷன் தப்பு இன்ஸ்பெக்டர்... மங்களையும், குமருவையும் வேற யாரோ தாக்கி கொன்னிருக்காங்க... மங்கள் இறந்து கிடந்த வீட்டுக்குள்ளே ஏழுமணி சுமார்க்கு குமரு போயிருக்கணும். அந்த சமயத்துல யாராலோ தாக்கப்பட்டு இறந்திருக்கணும்..."

ஹேமந்த் குமார் தலையாட்டினார்.

விவேக் டாக்டரை ஏறிட்டான்.

"குமருவோட 'மோட் ஆப் டெத்' எப்படி டாக்டர்...?"

"இரும்புத்தனமான - ஒரு கனமான பொருளாலே அவன் தலையில அடிச்சிருக்காங்க... மூளைப் பகுதியில ரத்தம் உறைஞ்சு போய் மரணம்..."

விவேக் எழுந்தான் "தாங்க்யூ டாக்டர்... உங்க போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கேஸுக்கு ஒரு புது திருப்பத்தைக் குடுத்திருக்கு... அவசியமானால் உங்களை மறுபடியும் மீட் பண்றோம்..."

இருவரும் வெளியே வந்தார்கள். ஜீப்பில் தாவினார்கள்.

"இன்ஸ்பெக்டர்"

"ஸார்..."

"மங்கள் வீட்டுச் சாவி உங்க கிட்ட தானே இருக்கு...?"

"ஆமா..."

"நேரா... ஜீப்பை மங்கள் வீட்டுக்கு விடுங்க... வீட்டை இன்னும் கொஞ்சம் துப்புரவா அலசணும்... கொலைகள் நடந்த அறையில எதையும் கலைக்கலையே...?"

"இல்ல ஸார்..."

ஜீப் மங்கள் வீட்டை நோக்கி பாய்ந்தது.

"நாம ரொட்டிக்கடை ராயர் கிட்டே இன்னொரு கேள்வியை கேட்க மறந்துட்டோம் இன்ஸ்பெக்டர்..."

"என்ன கேள்வி ஸார்?"

"குமருவுக்கு ப்ரண்ட்ஸ் இருக்காங்களா...ன்னு கேட்க மறந்துட்டோம்..."

"போகும்போது கேட்டுடலாம்..."

"போலீஸ் ஜீப் மங்களின் பங்களாவைத் தொட்டபோது- பதினோரு மணி. இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்கள் காம்பௌண்ட் கேட்டில் காவலுக்கு நின்றிருந்தார்கள். இரண்டு கொலைகள் நடந்ததுக்கான எந்த பரபரப்பும் காட்டாமல் வீடு ஒரு சாது சாமியார் மாதிரி தெரிந்தது. வேலையாள் லிங்கசாமி அழுதபடி நின்றிருக்க - கான்ஸ்டபிள் ஒருவர் வீட்டைத் திறந்து விட்டார்."

விவேக்கும் - ஹேமந்த் குமாரும் உள்ளே போனார்கள். உடல் கிடந்த இடங்கள் சாக்பீஸ் கோடுகளால் வரையப்பட்டிருக்க - ஃபரான்சிக் ஆட்கள் கைரேகை பதிவுகளை ஒற்றி எடுப்பதற்காக பவுடர் தூவியிருந்தார்கள். ஆயில் பெயிண்டின் ஈஸ்ட்மென் நிறங்களும், பிரஷ்களும் மாடர்ன் ஆர்ட் மாதிரி சிதறியிருந்தது.

"இன்ஸ்பெக்டர்... அந்த லிங்கசாமியை கொஞ்சம் கூப்பிடுங்க..."

ஹேமந்த் குமார் வெளியே போய் - வேலையாள் லிங்கசாமியைக் கூட்டிக் கொண்டு வந்தார். ,அவன் கண்களில் நீர் இன்னமும் காயாமல் இருந்தது. விவேக் அலமாரிகளையு, பீரோவையும் அலசிப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"உன்னோட முதலாளி மங்கள் எப்பேர்ப்பட்டவர்...?"

"நல்லவர் ஸார்..."

"குடிப்பாரா...?"

"மாட்டார்..."

"பொம்பளைங்க...?"

"எந்த மாதிரியான கெட்ட ப்ழக்கமும் அவர் கிட்டே இல்ல ஸார்... ஒரு பொண்ணு மேல தன்னோட உயிரையே வெச்சிருந் தார்... அந்தப் பொண்ணு அருவியில விழுந்து செத்துப் போனதும் - கொஞ்ச நாள் உன்மந்தம் பிடிச்சவர் மாதிரி இருந்தார். பெரிய முதலாளி இவர்க்கு கல்யாணம் ப்ண்ணி வெக்க முயற்சி செஞ்சப்போ... கல்யாணம் பண்ணிக்கவே மாட்டேன்னு சொல்லிட்டார்..."

"செத்துப்போன அந்தப் பொண்ணோட பேரென்ன...?"

"ரூபிணி"

"மங்களைத் தேடி இங்கே யாராவது வருவாங்களா...?"



"யாருமே வரமாட்டாங்க ஸார்..."

"ஃப்ரெண்ட்ஸ்..."

"யாரும் இருக்கிற மாதிரி தெரியலை... ஸார்..."

"காலையிலிருந்து சாயந்தரம் வரைக்கும் என்ன பண்ணுவார். எங்கெல்லாம் வெளியே போவார்...?"

"காலையில எட்டு மணிக்கு எந்திரிச் சுடுவார்... நானும் அந்த நேரத்துக்குத்தான் வேலைக்கு வருவேன். நான் வந்து காப்பி கலந்து கொடுத்ததும் - காமிராவும் கையுமா கார்ல கிளம்பிடுவார். ஒரு மணி நேரம் கழிச்சு வருவார்..."

விவேக் நெற்றியைச் சுருக்கினான்.

"தினமும் காமிராவோட வெளியே கிளம்பிடுவாரா...?"

"ஆமா...ஸார்... வந்ததும் பிலிம்ரோலை கழுவி... பிராசஸ் பண்ணிப் பார்த்துட்டுதான் சாப்பிட வருவார்... சாப்பிட்டு முடிஞ்சதும்- எடுத்த போட்டோக்கள்ல ஒண்ணை மாத்திரம் செலக்ட் பண்ணி அந்த ரூமுக் குள்ளே உட்கார்ந்துட்டு வரைய ஆரம்பிச் சுடு வாரு... சாயந்தரம் நாலு மணிக்கு மேலே மறுபடியும் காமிராவும் கையுமா கார்ல கிளம்பிடுவார்..."

"பிலிம்ரோலை அவரே பிராசஸ் பண்ணுவாரா...?"

"ஆமா ஸார்..."

"டார்க் ரூம் எங்கேயிருக்கு...?"

"வீட்டுக்குப் பின்பக்கத்துல..."

"வா... வந்து அந்த ரூமைக்காட்டு..." விவேக் சொல்ல லிங்கசாமி முன்னால் நடந்தான். ஹேமந்த் குமாரும் விவேக்கும் பின் தொடர்ந்தார்கள்.

வீட்டின் பின்பக்க மாடிப்படிகளுக்கு கீழே-

அந்த டார்க் ரூம் தெரிந்தது.

கதவு வெறுமனே சாத்தியிருக்க - விவேக் அதன் மேல் கையை வைத்து தள்ளினான். அது உள்ளே போய் இருட்டாய் அறையைக் காட்டியது. லிங்கசாமி உள்ளே போய்-ஸ்விட்ச் போர்டில் இருந்த பட்டனைத் தட்டினான். வெளிச்சம் உள்ளே வந்து நிரம்பியதும்-நுழைந்தான் விவேக்.

ஒரு பெரிய மேஜையின் மேல் - நான்கைந்து பீங்கான் ட்ரேக்கள். சுவர் அலமாரியில் சின்னச் சின்ன பாட்டில்கள். ப்ராஸஸிங், டெவலப்பிங் முடிந்த போட்டோக்கள் கிளிப்பில் மாட்டப்பட்டு கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்க - அவைகளை உருவினான் விவேக்.

ஒவ்வொரு போட்டோவாய் பார்த்துக் கொண்டே வந்தான். நீலமலைகளை பின்னணியாக வைத்துக் கொண்டு - ஒரு யூகலிப்ட்ஸ் மரம் க்ளோஸப்பில் தெரிந்தது. மெலிதான ரோஸ் நிறத்தில் கொத்துக் கொத்தாய் பூத்த பூக்கள், கொடைக்கானல் ஏரியின் தொலைதூரத் தோற்றம், மஞ்சல் பந்தாய் மறையும் சூரியன்... போட்டோக்களைப் பார்த்துக் கொண்டே வந்த விவேக்-



அந்த போட்டோவில் பார்வை பட்டதும்-கண்களை நிறுத்தினான்.

"லிங்கசாமி..."

"ஸார்..." அறைக்கு வெளியே இருந்து குரல் கொடுத்தான் லிங்கசாமி.

"கொஞ்சம் உள்ளே வா..."

அவன் வந்தான்.

"இந்தப் போட்டோவைப் பாரு... இதுல இருக்கிற ஆணும் பெண்ணும் யாரு...?" லிங்கசாமி போட்டோவைப் பார்த்துவிட்டு தலையாட்டினான்.

"யார்ன்னு எனக்குத் தெரியலை ஸார்..."

"நல்லா பார்த்துச் சொல்லு..."

"பார்த்துட்டேன் ஸார்... எனக்குத் தெரியலை... இந்த போட்டோவில இருக்கிற வங்களை நான் பார்த்ததே இல்லை..."

விவேக் யோசனையாய் அந்த போட்டோவைப் பார்த்தான் சூர்ய அஸ்த மனம் பின்னால் நிகழ்ந்து கொண்டிருக்க- ஒருத்தரையொருத்தர் பார்த்தபடி உட்கார்ந் திருந்த அந்த தம்பதிகள் விவேக்கைக் குழப்பனார்கள்.

'யார் இவர்கள்...?'

## 12

பங்களாவை விட்டு வெளியே ஓடி வந்து - மலைச் சரிவில் வெட்டி விடப்

பட்டிருந்த மண் பாதையில் ஓட்டமும் ந்டையுமாய் நடக்க ஆரம்பித்தார்கள் பிரதீப்பும், ராகினியும்.

"என்னங்க... ஏன்... அந்த பங்களாவை விட்டு வெளியே ஓடி வந்துட்டீங்க?" ராகினி கேட்டுக் கொண்டே கணவனைத் தொடர்ந் தாள்.

பிரதீப் சுருக்கமாய் சொன்னான்.

அதிர்ந்து போய் நெஞ்சில் கை வைத்து-கண்களை விரித்தாள் ராகினி. "அந்தப் பொண்ணைப் பார்த்தா அப்படி தெரி யலையே...?"

"ஒரு ஆபத்திலிருந்து தப்பிச்ச... இன்னொரு ஆபத்துல மாட்டிக்க இருந் தோம்..." சொல்லிக் கொண்டே வேகவேக மாய் நடந்தான் பிரதீப்.

மண்பாதையின் வளைவில் திரும்பி யதும் - முண்டாசு கட்டின அந்த மலைவாழ் ஆசாமி எதிர்பட்டான். பிரதீப் அவனை நிறுத்தி கேட்டான்.

"இந்த வழி எங்கே போகுது...?"

"செண்பகனூர் மியூஸியத்துக்கு..."

"அங்கிருந்து கொடைக்கானல் பஸ் ஸ்டாண்டுக்கு போக பஸ் கிடைக்குமா?"

"கிடைக்கும்..."

"இங்கிருந்து மியூஸியம் எவ்வளவு தூரம்...?"

"ஒரு மைல் தூரம் போகணும்..."



ஒரு மைல் தூரம் சரிவிலும், மேட்டிலும் 'புஸ் புஸ்' என்று மூச்சிரைத்துக் கொண்டு-ஏறி இறங்கி - காட்ரோட்டில் இருந்த செண்பகனூர் மியூஸியத்தைத் தொட்டார்கள்.

மியூஸியத்தின் வாசலில் அந்த டவுன் ஷிப் பஸ் நின்றிருக்க அதை நெருங்கி னார்கள். பஸ்ஸுக்குள் நான்கைந்து பேர் உட்கார்ந்து தெரிந்தார்கள்.

கண்டக்டரும், டிரைவரும் பீடிப்பு கையோடு வம்பளப்பில் இருந்தார்கள்.

"என்னண்ணே கிளம்பலாமா...?"

"ஒரு அஞ்சு நிமிஷம் பார்ப்போம் ராசு... மியூஸியத்துக்குள்ளே ஒரு சின்ன கும்பல் போயிருக்கு... வர்ற நேரம்தான்..."

"அந்த கும்பலுக்காக காத்திட்டிருந்தா... லேட்டாயிடும்ண்ணே..."

"சரி கெளம்பு..."

பிரதீப்பும், ராகினியும் பெருமூச்சுகளோடு பஸ்ஸில் ஏறினார்கள். "பஸ் ஸ்டேண்ட் போகுமா கண்டக்டர்...?"

"போகும் ஸார்... ஏறுங்க..."

ஒரு டபுள் ஷீட்டில் இரண்டு பேரும் உட்கார்ந்தார்கள். பஸ்கிளம்பியது. கண்டெக்டரிடம் இரண்டு ரூபாயை நீட்டி டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டான் பிரதீப்.

"லாட்ஜுக்குப் போனதும் என்னங்க... பண்ணலாம்...?"

"ரூமை காலி பண்ணிட்டு கிளம்ப வேண்டியதுதான்... நாம ஹனிமூனுக்கு புறப்பட்டு வந்த நேரம் சரியில்லை."

"நடந்ததுக்கெல்லாம் நீங்கதான் காரணம்."

பஸ் ஒரு நிறுத்தத்தில் நின்று விட்டு நகர்ந்தது. அந்த நிறுத்தத்தில் ஏறிய இரண்டுபேர், பிரதீப், ராகினி உட்கார்ந்திருந்த சீட்டுக்கு முன்புறமாய் வந்து உட்கார்ந்தார்கள். இரண்டு பேருமே நடுத்தர வயது. தலைகளுக்கு மப்ளர்களைச் சுற்றியிருந்தார்கள். ஒருத்தர் கேட்டார்.

"அப்புறம் என்னாச்சு...?"

"என்னாச்சா...? உள்ளே போய் பார்த்தா அந்தப் பையனும், இன்னொரு ஆசாமியும் செத்துக் கிடந்தாங்களாம்... நான் வர்றப்போ போலீஸ் ஜீப் நின்னுட்டிருந்தது. ஒரே கும்பலு..."

"காரணம் என்னான்னு தெரியலையா...?"

"இனிமேத்தான் தெரியும்... ந்யூஸ் சாயந்தரப் பேப்பர்ல வந்துடும்... நம்ம ஊர்ல இது மாதிரி ரெட்டைக் கொலை நடக்கிறது இதுதான் மொதல் தடவை..."

"செத்த பையன் பெரிய பணக்காரனா...?"

"அப்படித்தான் சொல்லிகிட்டாங்க... பையனோட அப்பா கூட வெளி நாட்டில் இருக்காராம்..."

"போலீஸ் சும்மா உட்டுடுவாங்களா...? கொலைக்கு காரணமானவங்களை எப்படியும் கண்டுபிடிச்சுடுவாங்க..."



பின் சீட்டில் உட்கார்ந்து - அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பிரதீப்பு, ராகினியும் திகில் பார்வைகளால் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். ராகினியின் உடம்புலேசாய் நடுங்க ஆரம்பித்தது.

## 13

காந்தன் பதட்டாய் தன் அறைக்குள் நுழைய - சிகரெட்டை ஆழ்ந்து உறிஞ்சியபடி கயிற்றுக் கட்டிலில் சாய்ந்திருந்த மருது திடும் மென்று எழுந்து உட்கார்ந்தான்.

"என்னடா... நீ மட்டும்வர்றே...? குமரு எங்கே...?"

காந்தன் அறைக் கதவை சாத்தி விட்டு - கட்டிலில் வந்து 'தொப்'பென்று உட்கார்ந்தான். தன் தலையை இரண்டு கைகளாலும் 'கப்' பென்று பற்றிக் கொண்டான்.

"என்னடா... ஒரு மாதிரியா இருக்கே... என்னாச்சு..."

காந்தன் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு - நடந்தவற்றை மெல்லிய குரலில் சொன்னான். அவன் சொல்லச் சொல்லவே மருதுவின் முகத்தில் ஏகப்பட்ட திகில்.

"குமருவை நீ கொன்னது சரியில்லை... காந்தன்..."

"அவனை உயிரோடு விட்டிருந்தா... நீயும் நானும் தூக்குக்குத் தான் போகணும்."

"குமருவோட பர்ஸ் கிடைச்சுதா இல்லையா...?"

"கிடைக்கலை..."

"அந்த புதுசா கல்யாணமான ஜோடியும் தப்பிச்சுட்டாங்க?"

"ஆமா..."

"அவங்க போலீஸ்ல போய் சொல்லிட்டா... நாம மாட்டிக்குவோம்... அதுக்கு முன்னாடி நாம அவங்களை முடிக்கணும்... அதானே இப்போ... நம்ம... வேலை...?"

"ஆமா... ஆனா அவங்களை எங்கேன்னு போய் தேடறது...? இந்நேரம் அவங்க போலீஸுக்கு போயிருந்தாலும் போயிருக்கலாம்..."

"அவங்க ரெண்டு பேரும் ஹோட்டல் தமிழ் நாட்டில்தான் தங்கியிருந்தாங்க... நான் போய் வேவு பார்த்துட்டு வரட்டுமா...?"

"உன்னை அவங்களுக்கு அடையாளம் தெரியாதா...?"

"தெரிஞ்சிருக்க நியாயமில்லை... இருந்தாலும் தலைக்கு தொப்பியைக் குடுத்து கண்ணாடி மாட்டிக்கறேன்..."

"பத்திரம் மருது... அவங்க ஹோட்டலுக்கு திரும்பியிருந்தா உடனடியா எனக்குத் தகவல் குடு... நான் ஸ்பாட்டுக்கு வந்துடறேன்... அந்த ரெண்டு பேரையும் தீர்த்துக் கட்டலைன்னா நாம தொலைஞ்சோம்..."

மருது 'உச்' கொட்டினான். "நான் நேத்து ராத்திரியே படிச்சு படிச்சு சொன்னேன்... மங்களை ரெண்டு தட்டு தட்டுறதோட நிறுத்திக்கலாம்... கொலை செய்ய



வேண்டாம்ன்னு சொன்னேன். நீயும் கேட்கலை... அவனும் கேட்கலை... இப்போ என்னாச்சு பார்த்தியா...? ஒரு கொலைக்கு ரெண்டு கொலையாயிடுச்சு... இன்னும் ரெண்டு பேரை தீர்த்துக்கட்ட அலையறோம்... இது தேவைதானா...?"

காந்தன் எரிச்சலானான்.

"இதோ... பார்... மருது... நடந்து போனதைப் பத்திபேசி ஒரு பிரயோஜனமும் இல்லை... போலீஸோட பார்வையிலிருந்து நாம தப்பணும்... அவங்க ரெண்டு பேரும் உயிரோடு இருந்தா நாம ரெண்டு பேரும் உயிரோடு இருக்க முடியாது..."

"சரி... நீ இங்கேயே... இரு... நான் போய் ஹோட்டல் தமிழ் நாடுல பார்த்துட்டு வர்றேன்..." மருது சொல்லிக் கொண்டே- சுவரின் திட்டில் இருந்த ஜாக்கி தொப்பியையும் - ஒரு மட்டமான கூலிங்கிளாஸையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

ஹோட்டல் தமிழ்நாடு இருந்த திசையை நோக்கி - வேகவேகமாய் நடக்கத் துவங்கினான். ஒரு பத்து நிமிஷ நடையில்-

ஹோட்டல் தமிழ்நாடு வந்தது.

ரிசப்ஷன் அறைக்குள் இயல்பாய் நடந்து போய் - பக்கத்திலிருந்த ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழைந்து - ஒரு காப்பிக்கு ஆர்டர் பண்ணி விட்டு-

வெளி வாசலைப் பார்த்தபடி-

காத்திருக்க ஆரம்பித்தான், மருது.

## 14

ரொட்டிக்கடை ராயல் தீர்க்கமான குரலில் சொன்னார். "அந்தக் குமரு ஒரு களவாணிப்பய ஸார்... அவனுக்கு யார் ப்ரண்ட்ஸ்... யார் விரோதிங்க... எனக் கெப்படி ஸார் தெரியும்...? ராத்திரி நேரத்துல எவனெவனோ வருவான் போவான்... நான் அவன் கூட பேசறதேயில்லை..."

விவேக் குறுக்கிட்டான்.

"வர்றவங்க பேர் வேண்டாம்... அடையாளமானவது...?"

"ஸார்... நான் சாயந்தரம் ஏழு மணிக் கெல்லாம் கடையை மூடிட்டு வீட்டுக்குள்ளே போனா... மறுநா... காலையிலதான் கடையைத் திறக்க வருவேன்... ராத்திரி பூராவும் மாடியிலிருந்து 'குமரு குமரு'ன்னு கூப்பிடற சத்தம் கேட்கும்... சிரிப்பு சத்தம் கேட்கும்... சிரிப்பு சத்தம் கேட்கும்... மறுநா பகல் பூராவும் அந்த களவாணிப்பய ரூம்ல படுத்து தூங்கிட்டிருப்பான்..."

விவேக் ஏமாற்றமாய் ஹேமந்த் குமாரைப் பார்த்தான். அவர் சொன்னார். "எதிர்த்தாப்புல ஒரு டீக்கடை இருக்கு... விசாரிச்சு பார்க்கலாமா ஸார்...?"

"வாங்க... பார்க்கலாம்... ர்ரயர் கோர்ட்டுக்கும் போலீஸுக்கும் ரொம்ப பயப் படறார்..."

எதிரேயிருந்த - குறிஞ்சியாண்டவர் டீ ஸ்டாலை இருவரும் நெருங்கினார்கள். தகர



போணியில் 'டபார்'ரென்று டீ அடித்துக் கொண்டிருந்த அந்த அழுக்கான டீ மாஸ்டர் மிரண்டு போய் விவேக்கைப் பார்த்தான்.

"இந்த கடைக்கு ஓனர் யாரு...?"

"நான்தான் ஸார்..."

"எதிரில மாடி மேலே குடியிருக்கிற குமருவை உனக்குத் தெரியுமா...?"

"தெரியும் ஸார்..."

"குமருவோட சிநேகிதர்கள் இங்கே வருவாங்களா...?"

"வரமாட்டாங்க ஸார்..."

"அவங்களைப் பார்த்தாவது இருக்கியா...?"

"இல்ல ஸார்..."

"உம்... பேரென்ன...?"

"ராமசாமி..."

"இதோ... பார் ராமசாமி... நீ யார்க்கும் பயப்பட வேண்டாம்... போலீஸுக்கு நீ உதவி பண்ணினா டிபார்ட்மெண்டிலிருந்து பணமும் மெடலும் வாங்கித் தர்றேன்..."

"எனக்குத் தெரியாது ஸார்..."

விவேக் சோர்வாய் ஹேமந்த் குமாரை ஏறிட்டான். "இன்ஸ்பெக்டர். இவனும் பயப்படறான்... ஒரு கான்ஸ்டபிளை கோரா பூர்க்கு அனுப்பி - குமருவோட அம்மாவை இங்கே கூட்டிட்டு வந்தால்தான் கேஸ் நகரும்..."

"கான்ஸ்டபிளை ஏற்கெனவே அனுப்பிச்சுட்டேன் ஸார்."

## 15

தமிழ்நாடு ஹோட்டலுக்குள் நுழைந் தார்கள் பிரதீப்பும் ராகினியும்.

பிரதீப் கௌண்டர் இளைஞனிடம் சொன்னான். "பில்ப்ரிப்பேர் பண்ணுங்க ஸார்... ரூமை வெகேட் பண்றோம்..."

அந்த இளைஞன் ஆச்சர்யப்பட்டான்.

"என்ன ஸார் திடீர்ன்னு. நாளைஞ்க நாள் தங்கப் போறதா சொன்னீங்க...?"

பிரதீப் படபடப்பை அடக்கிக் கொண்டு - வலிய புன்னகைத்தான்.

"மிஸஸுக்கு உடம்பு சரியில்லை... உடனே புறப்படணும்... பில் ப்ரிப்பேர் பண்ணி ரூமுக்கு அனுப்பி வையுங்க..."

சொல்லிவிட்டு தன் அறையை நோக்கி-வேகவேகமாய் போனான் பிரதிப். அறை வாசலில் ராகினி காத்திருந்தாள்.

"என்னங்க...?"

"ம்..."

"நீங்க ரொம்பவும் டென்சனா இருக் கீங்க... கௌண்டர்ல இருந்த அத்தனை பேரும் உங்களையே பார்க்கிறாங்க... கொஞ்சம் நார்மலா இருங்க..."

"இருக்க முடியலையே ராகினி... என் மூஞ்சியைப் பார்த்தியா... வேர்த்து வேர்த்து விடுது... கொடைக்கானல் எல்லையை விட்டு நகர்ந்தாத்தான் இந்த படபடப்பும் வேர்வையும் நிற்கும்..." - சொல்லிக் கொண்டே கதவைத் திறந்து உள்ளே போனான் பிரதீப்.



ராகினி தொடர்ந்தாள்.

ஸேங்கரிலும், பிளாஸ்டிக் கயிற்றிலும் தொங்கிக் கொண்டிருந்த - சேலைகளையும், பேண்ட் சர்ட்களையும் அள்ளி - சூட்கேஸில் திணித்து மூடினான்.

"ராகினி..."

"ம்..."

"பாத்ரூம்ல துவைக்கப் போட்டிருந்த ட்ரஸ் ஏதாவது இருக்கான்னு பாரு..."

"ஒண்ணும் இல்லீங்க..."

"சரி... அந்த 'ஏர் பேக்'ல சோப்பு, சீப்பு, ஷேவிங் செட் எல்லாத்தையும் போட்டு அமுக்கு...! இன்னும் பத்தே நிமிஷத்துல நாம மதுரை போற பஸ்ஸுல உட்கார்ந் திட்டிருக்கணும்..."

"டொக்...டொக்..."

அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு திரும்பினார்கள்.

ஹோட்டல் பையன் கையில் 'பில்' லோடு நின்றிருந்தான். "பணம் தர்றீங்களா இல்லே... நீங்களே கௌண்டர்ல கட்டிடறீங் களா ஸார்...?"

"இந்தாப்பா... நீயே கட்டிடு..."

பில் தொகை பார்த்து - மணிபர்ஸை உருவி ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்டினான் பிரதீப். அவன் வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

சூட்கேஸை அடைத்து - லாக் செய்து - ஏர்பேக்கின் ஜிப்பை இழுத்து - மூடினான் பிரதீப்.

கதவருகே நிழல் தட்டியது.

ராகினி திரும்பிப் பார்த்துவிட்டு சொன்னாள். "என்னங்க... யாரோ... ரூம் வாசல்ல நிக்கறாங்க..."

பிரதீப் திரும்பினான்.

தொப்பித்தலையும், கூலிங்கிளாஸ"மாய் தெரிந்தான் அவன். பிரதீப்பைப் பார்த்ததும் புன்னகைத்தான். "எக்ஸ்க்யூஸ்மீ ஸார்... உங்க பேர் திவாகர்தானே..."

"இல்லையே... எம்பேர் பிரதீப்..."

"ஸாரி... என்னோ. ஃப்ரெண்ட் ஒருத்தர் உங்க மாதிரியே இருப்பார். அதான் ஏமாந்துட்டேன்... உங்களுக்கு சொந்த ஊர் கோயமுத்தூரா ஸார்...?"

"இல்லை...மதுரை..."

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்... பை... த... பை... ரூமை காலி பண்றீங்களா...?"

"ஆமா..."

அந்த தொப்பிக்காரன் நகர்ந்தான். அவன் நகர்ந்து போனதும் ராகினி பிரதீப்பிடம் கிசுகிசுத்தாள். "யார்ங்க... இந்த ஆளு...? பார்வையும் பேச்சும் ஒரு மாதிரியா இருக்கு... அவன் ஏதோ உளவு பார்க்க வந்தவன் மாதிரி தெரியுது."



"இதோ பார்... ராகினி... நாம இப்போ இருக்கிற நிலை மையில யார் வந்து நம்ம கூட பேசினாலும் சரி., நமக்கு சந்தேகமாத் தான் தோணுது..."

"இல்லீங்க... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே வந்தவன் சரியில்லை" ராகினி தீர்மானமாய்ச் சொன்னாள்.

## 16

போலீஸ் ஸ்டேஷன்.

விவேக் தன் கையிலிருந்த பிரதீப் - ராகினி போட்டோவைப் பார்த்துக் கொண்டே ஹேமந்த் குமாரிடம் சொன்னான். "இந்த போட்டோவில் இருக்கிற ஆணும், பெண்ணும் யார்ன்னு தெரிஞ்சா... கேஸ் ஒரு பிடிப்பு கிடைக்கும்..."

"இறந்துபோன மங்களோட அப்பா அமெரிக்காவிலிருந்து வந்த பின்னடிதான் இவங்க யார்ங்கிறது தெரியும்"

போட்டோவைத் திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருந்த விவேக்கின் பார்வையில் பிரதீப்பின் சர்ட் பாக்கெட் சில விநாடி நின்றது.

கண்கள் உன்னிப்பாய் பார்த்தது.

"இன்ஸ்பெக்டர்..."

"என்ன ஸார்..."

"போட்டோவில் இருக்கிற நபரோட சர்ட் பாக்கெட்டை பார்த்தீங்களா...?"

அவர் வாங்கிப் பார்த்தார். பார்த்து விட்டு புரியாமல் நிமிர்ந்தார்.

“பாக்கெட்டில் என்ன ஸார்...?”

“உன்னிப்பா பாருங்க...”

மறுபடியும் உன்னிப்பாய் பார்த்தார் இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமார். கொஞ்சம் கொஞ்சமாய் மலர்ந்தார். “சர்ட் பாக்கெட்ல லெட்டர் மாதிரி ஏதோ தெரியுது ஸார்... லெட்டர்ஸூம் மெலிசா தெரியுது...”

“ட்ரான்ஸ்பரன்சி மாதிரி மெலிசான துணியாலான சர்ட் போட்டிருக்கிறதுனால் வீ ஆர் கெட்டிங் திஸ் க்ளு... அந்த சர்ட் பாக்கெட்டில் இருக்கிறது லெட்டரில்லை இன்ஸ்பெக்டர்... ஹோட்டல் ரசீது...”

“ஹோட்டல் ரசீதா...?”

“எஸ்... இன்ஸ்பெக்டர்... இன்னும் குறிப்பா சொல்லப் போனா... ஹோட்டல் தமிழ்நாடு ரசீது... அந்த ரசீதோட ஓரத்தை உன்னிப்பா பாருங்க.. ஹோட்டல் தமிழ்நாடோட ட்ரேட் மார்க் சின்னம் குடை தெரியுது...”

இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமார் விவேக்கை பிரமிப்பாய் பார்த்தார். “யூ...ஆர் கரெக்ட் ஸார்... ரியலி திஸ் ஈஸ் ஃபெண்டாஸ்டிக் ஸார்...”

விவேக்கின் கைகளைப் பற்றிக் கொண்டு-

ஆவேச சந்தோஷத்தோடு குலுக்கித் தீர்த்தார் ஹேமந்த் குமார்.



# 17

ஹோட்டல் தமிழ்நாடு. போலீஸ் ஜீப்பை ரோட்டோரத்தில் நிறுத்தி விட்டு ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள் விவேக்கும், இன்ஸ்பெக்டர் ஹேமந்த் குமாரும். கௌண்டரில் நின்றிருந்த இளைஞன் எழுந்து நின்று “எஸ்” சொல்லி பவ்யம் காட்ட - அந்த இளைஞனை நெருங்கி - தன் கையிலிருந்த போட்டோவை நீட்டினான்.

“இவங்க உங்க ஹோட்டல்ல தங்கி யிருக்காங்களான்னு பார்த்துச் சொல்ல முடியுமா...?”

அந்த இளைஞன் போட்டோவைப் பார்த்து விட்டு-

கண்களை விரித்தான்.

“ஸார்... இப்பத்தான் இவங்க ரூமை காலி பண்ணிட்டு புறப்பட்டுப் போறாங்க...”

“எவ்வளவு நிமிஷம் இருக்கும்?”

“பதினைஞ்சு நிமிஷம்”

“யார் இவங்க... அட்ரஸ் பார்த்து சொல்லுங்க...”

அந்த இளைஞன் லெட்ஜரைப் புரட்டிப் பார்த்துவிட்டு சொன்னான். “பேர் பிரதீப் ஸார். பொண்ணோட பேரு ராகினி... ஊர் மதுரை...”

“அட்ரஸ்...?”

“அட்ரஸைச் சொன்னான் கௌண்டர் இளைஞன்.

"கொடைக்கானலுக்கு எப்போ வந்தாங்க...?"

"நேத்து காலையில... அஞ்சாறு நாளைக்கு தங்குவோம்ன்னு சொன்னவங்க திடீர்ன்னு புறப்பட்டு போறாங்க ஸார்..."

"காலையில அவங்க எங்கே போயிருந்தாங்கன்னு தெரியுமா...?"

"சில்வர் காஸ்கோட்டுக்கு போகணும்ன்னு சொல்லிட்டிருந்தாங்க... ஏழுமணிக்கு புறப்பட்டும் போனாங்க. கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் வந்தாங்க... ரெண்டு பேருமே ரொம்பவும் பதட்டமா இருந்தாங்க... இந்தக் குளிரிலும் வேர்த்து வேர்த்து வழிஞ்சாங்க..."

"சில்வர் காஸ்கோட்டுக்கு எதுல போனாங்க... டாக்ஸியா... பஸ்ஸா...?"

"டாக்ஸின்னுதான் நினைக்கிறேன் ஸார்... ஏன்னா... டாக்ஸி ஸ்டாண்ட்ல நின்னுகிட்டு பேரம் பேசிட்டிருந்தாங்க..."

விவேக் ஹேமந்த் குமாரிடம் திரும்பினான். "இன்ஸ்பெக்டர்... நீங்க என்கொய்ரியை இங்கே கண்டினியூ பண்ணுங்க... நான் எதிர்ல இருக்கிற டாக்ஸி ஸ்டாண்ட்டுக்கு போயிட்டு வர்றேன்..."

ஹேமந்த் குமார் தலையாட்ட-

விவேக் எதிரே இருந்த டாக்ஸி ஸ்டாண்டை நோக்கிப் போனான். ஐந்தாறு டாக்ஸிகள் யூனிபார்மாய் - கொடைக்கானலின் இதமான வெய்யிலில் காய்ந்து



கொண்டிருக்க - டிரைவர்கள் அரசியல் வம்பளப்பில் இருந்தார்கள். விவேக்கைப் பார்த்ததும் போலீஸ் அட்டையைக் காட்டியதும் லேசாய் மிரண்டார்கள்.

விவேக் எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு - மெல்லிய குரலில் கேட்டான். "காலையில யார் சில்வர் காஸ் கோட்டுக்கு சவாரியை ஏத்திகிட்டு போனது...?"

"நான்தான் ஸார்..."

அந்த டாக்ஸி டிரைவர் முன்னால் வந்தான்.

"உம் பேரு..."

"அய்யாசாமி ஸார்..."

"நீ டாக்ஸியில ஏத்திகிட்டு போனது இவங்களைத்தானா...?" போட்டோவைக் காட்டினான் விவேக்.

அய்யாசாமி மலர்ந்தான். "ஆமா... ஸார்... இவங்கதான். புதுசா கல்யாணமான ஜோடி..."

"சில்வர் காஸ்கோட்ல எங்கே எறக்கி விட்டே...?"

அடையாளம் சொன்னான் அய்யாசாமி.

"அவங்களை அங்கே எறக்கி விட்டுட்டு நீ வந்துட்டியா...?"

"ஆமா ஸார்..."

"டாக்ஸியில வரும்போது என்ன பேசிட்டு வந்தாங்க...?"

"ஏதோ தமாஷா பேசி சிரிச்சுட்டு வந்தாங்க... ஸார்..."

"அவங்க பேசும்போது மங்கள் என்கிற பேரோ... குமரு என்கிற பேரோ அடி பட்டதா?" விவேக் கேட்க அய்யாசாமி தலையாட்டினான்.

"நான் கவனிக்கலை ஸார்..."

"சரி.. அவங்க ரெண்டு பேரையும் அந்த சில்வர் காஸ்கோட் வீட்டுக்கு முன்னாலே இறக்கி விட்டபோது - உள்ளேயிருந்து யாராவது வந்து அவங்களை ரிஸீவ் பண்ணினாங்களா...?"

"இல்ல ஸார்..."

விவேக் மோவாயை வழுவிக் கொண்டு - யோசிக்கும் போதே ஹோட்டலின் உள்ளேயிருந்து ஹேமந்த் குமார் வந்தார்.

"ஸார்... அவங்க ரெண்டு பேரும் மதுரை பஸ்ஸைப் பிடிக்கறதுக்காக பஸ் ஸ்டேண்ட் போயிருக்கலாம்ன்னு ஹோட்டல் ரிசப்னிஷ்ம் சொல்றார். ட்ரை பண்ணி பார்க்கலாமா ஸார்?"

விவேக் தலையாட்டிக் கொண்டே ஜீப்பை நோக்கி போனான்.

## 18

காந்தன் நீட்டிய காக்கிப் பையை வாங்கிக் கொண்டே மருது சொன்னான். "காந்தன் நாம தப்புக்கு மேலே தப்பு பண்ணிட்டே போறோம்... அவங்க ரெண்டு பேரைக் கொல்றதுக்காக இந்த டைம் பாமை அவங்க பிரயாணம் பண்ற பஸ்ஸுல வெக்கச் சொல்றே...? அவங்க ரெண்டு பேர்க்காக பஸ்ஸுல பிரயாணம் பண்ற அத்தனை பேரும் சாகணுமா...?"

கொடைக்கனால் பஸ் ஸ்டேண்டின் - கட்டணக் கழிப்பிட இருப்பிடத்திற்கு கொஞ்சம் தள்ளி மறைவாக நின்று கொண்டு மருதுவும், காந்தனும் பேசிக் கொண்டிருந்தார்கள். பஸ் ஸ்டேண்ட் முழுவதும் கூட்டம் 'நசநச' வென்று இருந்தது. நிறைய பாண்டியன்கள் ஏறுக்குமாறாய் நின்று கொண்டிருக்க - நடுவே மதுரை போகும் அந்த பாண்டியனில் - ஜன்னலோரமாய் பிரதீப்பும் ராகினியும் தெரிந்தார்கள். இருவர் முகங்களிலும் வெள்ளமாய் வியர்வை.

"இதோ... பார்... மருது... சாகிறவங்களுக் காக நீ ரெ'சாபப் பட்டா நாம உயிரோடு இருக்க முடியாது... அவங்க கொடைக் கனலை விட்டு தாண்டிட்டா அப்புறம் நாம எதுவுமே செய்ய முடியாது... நீ இந்த 'டைம் பாம்' காக்கி பையை - அவங்க தலைக்கு மேலே இருக்கிற லக்கேஜ் காரியர்ல வெச்சுட்டு - பாசஞ்சர் மாதிரி கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டு - எறங்கிடு..."

"யாராவது பார்த்துட்டா...?"

"யார் பார்க்கப் போறாங்க... பையை பஸ்ஸுல கொண்டு போய் வெக்கறதுக்கு முன்னாடி... அந்த கொய்யா பழக்காரிகிட்டே

ரெண்டு ரூபாய்க்கு புழம் வாங்கி... மேலே பரப்பிடு..."

"டைம் பாம் எத்தனை மணிக்கு வெடிக்கிற மாதிரி செட் பண்ணியிருக்கே..."

"இன்னும் அரைமணி நேரத்துல..."

"இப்பவே போய் வெச்சுட்டு வந்துரட்டுமா...?"

"ம்...போ... தலைக்கு தலைப்பா கட்டிக்க... கூலிங்கிளாஸை கழட்டிடு... கண்டக்டர்க்கு தெரியாமே பஸ்ஸுல ஏறி - அந்த ரெண்டு பேரோட தலைக்கு மேலே - சரியா தலைக்கு மேலே வெச்சுடு... ஒரு ரெண்டு நிமிஷம் உள்ளே உக்காரு... அப்புறம் எறங்கிடு..."

"சரி..."

பிரதீப்பும் ராகினியும் உட்கார்ந்திருந்த பஸ்ஸை நோக்கி மெதுவாய் நடக்க ஆரம்பித்தான் மருது. காந்தன் அங்கேயிருந்த ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டு - பஸ்ஸை நோக்கிப் போகும் மருதுவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

## 19

பஸ் ஸ்டேண்ட்டை ஜீப் தொட்டது.

"இன்ஸ்பெக்டர்... நீங்க வெளியே ஜீப்பிலேயே வெயிட் பண்ணுங்க. நான் மட்டும் பஸ் ஸ்டாண்ட்டுக்குள்ளே போறேன்... நீங்களும் வந்தா உங்க யூனிபார்மை பார்த்ததும் அலர்ட் ஆயிடுவாங்க..."

ஹேமந்த் குமார் தலைய சைத்து ஜீப்பை பேராட்டோரமாய் நிறுத்திக் கொள்ள விவேக் மட்டும் இறங்கி பஸ் ஸ்டாண்டுக்குள் போனான். நிறைய பஸ்கள் நான் பழனி நான் கமுதி, நான் கிருதயா புரம் என்று நெற்றியில் ஒட்டவைத்துக் கொண்டு - பிரயாணிகளை விழுங்கியபடி நின்றிருந்தது. விவேக் மதுரைபோகும் பஸ்ஸைத் தேடித் கொண்டு அந்த கும்பலுக்கு மத்தியில் நடந்தான்.

அந்த கொய்யப்பழம் விற்கிற கூடைக்காரி அருகே வந்ததும் எதிரே வந்த ஒரு யாத்ரீக கும்பலுக்காக ஒதுங்கி நின்றான் விவேக்.

"ஒரு பழம் ஐம்பது காசு... ஐந்து ரூபாய்க்கு நீ கேக்கிறதுனாலே பன்னிரெண்டு பழம் தர்றேன்... பையைக் காமி..."

தலைப்பாகை ஆசாமி காட்டினான்.

"பைக்குள்ளாற என்னமோ இருக்கு..."

"இருக்கட்டும் அது மேலேயே போடு... ஒண்ணும் ஆகாது..."

"ஒயரெல்லாம் நீட்டிட்டிருக்கு... கரெண்ட் ஜாமானா...?"

"ஆமா...! நீ மொதல்ல பழத்தைப் போடு... எனக்கு பஸ்ஸுக்கு நேரமாச்சு..." அவன் பழங்களை எடுத்து போட்டுக் கொண்டிருக்க விவேக் அங்கேயிருந்த சின்ன மண் திட்டின் மேல் ஏறி நின்று மதுரை

பஸ்ஸைத் தேடினான். பார்வை 'பரபர' வென்று அலைந்தது.

"என்னடா... மருது... தலைக்கு தலைப் பாகையை கட்டிகிட்டு... ஆளே மாறிப் போயிட்டே... கொய்யாப்பழம் யாருக்கு... சின்னவூட்டுக்கா...? பெரிய வூட்டுக்கா..."

"அட... தாம்பன்... நீயா... என்னிக்கு ரிலீஸானே...?"

"காலையில..."

"வேலூரா...? மதுரையா...?"

"பாளயங்கோட்டை..." என்று பெருமை யாய் சொல்லிச் சிரித்த தாம்பன் குரலை தாழ்த்திக் கொண்டு கேட்டான். "குமருவும் காந்தனும் உள்ளே இருக்காங்களா... வெளியே இருக்காங்களா...?"

மதுரை பஸ்ஸை கண்களால் தேடிக் கொண்டிருந்த விவேக்கின் காதுகளில் 'குமரு' என்கிற வார்த்தை 'சுரீர்' என்று பட திரும்பி அந்த இருவரையும் பார்த்தான்.

"ஒரு அசம்பாவிதம் நடந்து போச்சு தாம்பா... நீ சாயந்தரம் நம்ம ரூமுக்கு வா... விலாவாரியா சொல்றேன்... எனக்கு இப்போ ஒரு முக்கியமான வேலையிருக்கு..."

"என்ன மருது... ஆளே... இன்னிக்கு தினுசா இருக்கே...நீ தலைப்பாகையைக் கட்டி நான் என்னிக்கும் பார்த்தில்லையே... ஏதாவது தேட்டை போடப் போறியா...?"



"அதெல்லாம் ஒண்ணுமில்லே... வரட்டா..."

அவன் பையோடு நடக்க-

விவேக் இயல்பாய் அவனைத் தொடர்ந் தான். அந்த குறுகலான பிளாட்பாரத்தைத் தாண்டியதும் நின்றிருந்த மதுரை பஸ் கண்ணில் பட்டது. ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த பிரதீப்பையும் ராகினி யையும் ஓரப்பார்வை பார்த்துக் கொண்டே பஸ்ஸை நெருங்கினான்.

ஃபுட் போர்டில் கால் வைக்க முயன்ற போது

விவேக் அவன் தோளைத் தொட்டான்.

"மருது..."

அவன் திடுக்கிட்டுப் போய் திரும்பி னான். விவேக்கை மிரள்கிற பார்வையோடு பார்த்தான். "யா...யாா...நீங்க...?"

"உன்னை மாதிரியான ஆட்களை பிடிக்கிறதுக்காகவே கவர் மெண்ட்ல சம்பளம் கொடுத்து வெச்சிருக்கிற நிறைய பேர்ல நானும் ஒருத்தன். 'க்ரைம் பிராஞ்ச்'ன்னு ஒரு வார்த்தை கேட்டிருக்கியா...?"

மருது ஓட எத்தனிக்க-

'ர்ர்ரப்'பென்று அவனுடைய பிடரியில் அறைந்து சர்ட் காலரை அள்ளி கசக்கினான். "குமரு... உன்னோட ப்ரண்ட் தானே...?"

அவன் பதில் சொல்லாமல் மௌனித் தான்.

விவேக் தன் கூர்மையான பூட்ஸ் காலை உயர்த்தினான். "சொ... சொல்லு... குமரு உன்னோட ப்ரண்ட் தானே...?"

அவன் அடிக்கு பயந்து வாளைத் திறந்தான்.

"ஆ... ஆமா...ஸார்..."

"கையில என்ன பை...?"

"கொ... கொய்யாப்பழம் ஸார்..."

"அதை இப்படி கொட்டு..."

"அவன் தயங்க - விவேக் அதை வாங்கி கொட்டினான். கொய்யாப் பழங்களுக்கு மத்தியில் அந்த டைனமைட் சமாச்சாரம் - சின்ன சின்ன பிளாஸ்டிக் ஒயர் இணைப்பு களோடும் - அதனோடு இணைக்கப்பட் டிருந்த டைம்பீஸோடு வெளியே வந்தது.

கும்பல் கூட ஆரம்பிக்க -

ஒரு கையில் பையோடும் - இன்னொரு கையால் குமருவைத் தள்ளிக் கொண்டு ஜன்னலோரம் உட்கார்ந்திருந்த பிரதீப்பிடம் வந்தான் விவேக். தன் போலீஸ் அட்டையை எடுத்துக் காட்டினான்.

"மிஸ்டர்... பிரதீப்... பஸ் ஸ்டாண்ட் டுக்கு வெளியே போலீஸ் ஜீப் காத்திட் டிருக்கு... உங்க மனைவி ராகினியை கூட்டிகிட்டு ஜீப்புக்கு வர்றீங்களா...?"

பிரதீப்பும் ராகினியும் இருண்டு போன முகங்களோடு - சூட்கேஸையும் ஏர்பேக்கை யும் எடுத்துக் கொண்டு கீழே இறங்கினார்கள்.



# 20

மத்தியானம் இரண்டு மணி.

ஸ்கூட்டரில் வந்து இறங்கினார்கள் விவேக்கும் குருவும்.

வாசலில் காத்திருந்த ரூபலா போலி யாக கோபப் பட்டாள். "பசியில் என் பிராணன் போகுது... இவ்வளவு சாகவாசமா வர்றீங்களே...?"

"ஒரு விஷயம் சொன்னா உனக்கு பசியே மறந்து போகும்...?"

"என்ன...?"

"கேஸ் ஒரு முடிவுக்கு வந்தாச்சு..."

"கொலை பண்ணின ஆசாமியை அமுக்கிட்டீங்களா...?"

"இந்நேரம் லாக் அப்புல ரெண்டு பேரும் முழங்காலைக் கட்டி கிட்டு உட்கார்ந்திருப்பாங்க..."

"ரெண்டு பேரா...?"

"ஆமா. ஒருத்தனோட திருநாமம் காந்தன். இன்னொருத்தனோட பெத்த பேரு மருது... ஹேமந்த் குமார் தன்னோட லத்தியை சுழற்றின வேகத்துல - ரெண்டு பேரும் போட்டி போட்டுக்கிட்டு உண்மை களை கக்கிட்டாங்க... இந்த கொலைக் கேஸ்ல பரிதாபப்பட வேண்டிய ஒரு அம்சம் என்னான்னா... ஹனிமூனுக்கு வந்த ஒரு இளம் ஜோடி காலையிலிருந்து மத்தியானம் வரைக்கும் படாத பாடு பட்டிருக்காங்க...

கொலையாளிகளே அமுக்கினதும் தான் அவங்க முகத்துல சிரிப்பே வந்தது. மதுரைக்குப் போக இருந்தவங்க அதை கான்சல் பண்ணிட்டு ஹனிமூனை கன்டினியூ பண்ண ஆரம்பிச்சுட்டாங்க..."

ரூபலா சிரித்தாள்.

"உங்க கேஸ் ஹிஸ்டரியிலேயே... இவ்வளவு சீக்கிரத்துல... நீங்க கண்டு கொலையாளிகளை பிடிச்சதில்லை...! இதை கின்னஸ் புத்தகத்துக்கு எழுதிப் போட்டா என்ன...?"

"நான் இன்னிக்கே ஒரு போஸ்ட் கார்டுல எழுதிப் போட்டுடறேன்..."

சொன்ன குருவை - முறைத்தான் விவேக்.

டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை R.S.Publication நாவல் நேரம், 64/2, நாட்டு சுப்புராயன் தெரு, மைலாப்பூர், சென்னை - 4. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்ப வேண்டும்
ஆசிரியர் & வெளியிடுபவர் ஆர். முரளி.
Owner & Published by R.Murali, at 64/2, Nattsubbraya Street, Mylapore, Chennai - 4. and Printed by Srinivasan Printers, Alwarpet, Chennai - 18.